பக்கங்கள்: பன்னிரண்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஆவணி 27 வியாழக்கிழமை (12-09-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:289

# அரசு, புலிகள் இருதரப்பினர்களும் நாளை தாய்லாந்துக்குப் புறப்பாடு!

## பேச்சு நடக்கும் கடற்படைத் தளத்துக்கு ஞாயிறன்றே அழைத்துச் செல்லப்படுவர்

கொழும்பு,செப்ரெம்பர்12

**எதிர்வரும் 16ஆம் திகதி நோர்வேயின் அனுசரணையுடன் தாய்லாந்தில் நடைபெறவிருக்கும் முதல் சுற்றுப் பேச்சில் கலந்து கொள்வதற்காக அரசுத் தரப்பினரும் புலிகள் தரப்பினரும் நாளை தாய்லாந்துக்குப் புறப்படுகின்றனர். அரசுத்தரப்பினர் நால்வரும் கொழும்பில் இருந்தும் புலிகள் தரப்பினர் நால்வரும் லண்டனில்' இருந்தும் செல்கிறார்கள்.**

இவர்களுக்கான சகல பாதுகாப்பு ஒழுங்குகளையும் நோர்வேயுடன் கலந்தாலோசித்து தாய்லாந்து அரசு செய்திருக்கிறது.

இருதரப்பினரும் தாய்லாந்து சென்றடைந்ததும் அவர்களைத் தாய்லாந்து அரசு பொறுப்பேற்றுக்கொள்ளும்.

பேச்சு நடைபெறவிருக்கும் சத்தாஹிப் கடற்படைத்தளத்திற்கு 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இருதரப்பினரும் அழைத்துச் செல்லப்படுவர்.

அடுத்தநாள் திங்கள் மாலையில் 2 மணிமுதல் 6 மணிவரை கடற்படைத்தளத்தில் இரு தரப்பினரும் பேச்சு நடத்துவார்கள்.

அதற்கு முன்னர் காலையில் இரு தரப்பினரையும் ஊடகவியலாளர்கள் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

கடற்படைத்தளத்திற்கு அருகேயுள்ள அம்பா சடர் சிட்டி ஜொன்டியன் ஹோட்டலில் இந்தச் சந்திப்பு காலை 10.30 மணிக்கு நடைபெறும். அதற்காக பேச்சில் கலந்து கொள்ளும் அரச குழுவினரும் புலிகள் குழுவினரும் ஹோட்டலுக்கு அழைத்து

(12ஆம் பக்கம் பார்க்க)

## 14 புலிகளையே விடுவிக்கலாம் அரசாங்கத் தரப்பில் தெரிவிப்பு

கொழும்பு,செப்.12

கைதிகள் பரிமாற்றத்தின் கீழ் ஆக 14 புலிகளையே தற்போதைய நிலையில் விடுவிக்கமுடியும் என்று விடுதலைப் புலிகளுக்கு அரசு அறிவித்திருக்கின்றது.

இணையத்தளம் ஒன்று இத்தகவலை தெரிவித்திருக்கின்றது.

புலிகளின் காவலில் ஏழு படையினர் உள்ளனர். அவர்களுக்குப் பதிலாக கைதிகள் பரிமாற்றத்தின் கீழ் 23 புலிகளை விடுவிக்க அரசு முன்வந்ததாக முன்பு செய்திகள் வெளியாகிருந்தன.

கைதிகள் பரிமாற்றத்துக்கான ஏற்பாடுகளும் நடந்தன. ஆனால், இறுதி நேரத்தில் அது ஒத்திவைக்கப்பட்டது. கைதிகள் பரிமாற்றத்தின் கீழ் விடுவிக்கப்படவிருக்கும் புலிகளின் பட்டியலை ஜனாதிபதி அரசிடம் கோரியிருந்தார். பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன அப்பட்டியலை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்திருந்தார்.

அதன்பின்னர் தற்போது காவலில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் நிர்வாகப் பொறுப்பாளர் குருநாகலையில் விபத்தில் படுகாயம்

### கொழும்பில் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை

கொழும்பு,செப்.12

விடுதலைப் புலிகளின் வடக்கு-கிழக்கு நிர்வாகத்துறைப் பொறுப்பாளரான பூவண்ணன் படுகாயமடைந்து கொழும்பு தனியார் மருத்துவமனை ஒன்றில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

கொழும்புக்கு வந்த அவர், வாகனத்தில் திரும்பிச் செல்கையில் குருநாகல் - தம்புள்ளை வீதியில் இடம்பெற்ற ஒரு விபத்தில் சிக்கியே படுகாயமடைந்தார். கடந்த ஞாயிறன்று இவ்விபத்து இடம்பெற்றது.

புலிகள் இயக்கத்தின் நிர்வாகப் பிரிவின் சிரேஷ்ட தலைவர்களுள் பூவண்ணன் ஒருவர்.

கொழும்பில் சிகிச்சை பெற்று வரும் ஓர் உறவினரைப் பார்க்கவே அவர் கொழும்பு வந்திருந்தார். புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி பாது

(12ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்க ஏற்பாடு?

கொழும்பு,செப்.12

எதிர்வரும் 25ஆம் திகதி வடக்கிலும், கிழக்கில் சில பகுதிகளிலும் நடைபெறவேண்டிய உள்ளூராட்சித் தேர்தல்களை ஒத்திவைக்குமாறு தமிழ்க்கட்சி கூட்டமைப்பு கோரியுள்ளது.

கூட்டமைப்பின் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்று நேற்று பிரதமரைச் சந்தித்து இந்தக் கோரிக்கையை விடுத்தது.

இத்தேர்தல் ஒத்திவைக்கப்படும் என்பதில் தங்களுக்கு முழு நம்பிக்கை இருப்பதாக பிரதமருடனான சந்திப்பின் பின்னர் கூட்டமைப்புப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

உள்ளூராட்சித் தேர்தல் சட்டத்தில் மீண்டும் ஒரு திருத்தம் கொண்டுவராமல் தேர்தலை ஒத்திவைக்க வழியில்லை என்று தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் கூறுகின்றன

எனினும் செப்ரெம்பர் 25ஆம் திகதிக்கு முன்னர் அத்தகைய சட்டம் ஒன்றைக் கொண்டுவருவதற்கான சாத்தியங்கள் மிகமிகக் குறைவு என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

*(மற்றொரு செய்தி 2ஆம் பக்கத்தில்)* (ம)

## வாந்திபேதியின் தாக்கம் குடாநாட்டில் அதிகரிப்பு

### மேலும் ஒருவர் நேற்று உயிரிழந்தார்

யாழ்ப்பாணம்,செப்.12

யாழ். குடாநாட்டில் வாந்திபேதியின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதாக யாழ்.வைத்தியசாலைப் புள்ளி விவரங்களில் இருந்து தெரியவருகின்றது.

இந்நோயின் தாக்கத்துக்குள்ளாகி மேலும் ஒருவர் உயிரிழந்ததுடன், கடந்த இரு நாள்களில் மூவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வசாவிளான்,குட்டியப்புலம் பகுதியைச் சேர்ந்த தவயோகராசா வாசுகி (வயது 15) என்ற இளம் பெண்ணே இறுதியாக வாந்திபேதிக்கு இலக்காகி மரணமானவராவார்.

இவரது சடலத்தை குறிப்பிட்ட மயானமொன்றில் அடக்கம் செய்யும்படி ஆஸ்பத்திரி நிர்வாகம் கேட்டுக்கொண்டதை அடுத்து யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள ஒரு மயானத்தி

(12ஆம் பக்கம் பார்க்க)

## புதிய பரிவர்த்தனை நிலையம் குடாநாட்டில் நேற்றுத் திறப்பு

### ஊடகத்துறை அமைச்சர் ஆரம்பித்து வைத்தார்

யாழ்ப்பாணம்,செப்.12

குடாநாட்டில் தொலைத்தொடர்பு சேவையை அபிவிருத்தி செய்வதற்காக புதிதாக பரிவர்த்தனை நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையம் மூலமாக குடாநாட்டுக்கு 10 ஆயிரம் புதியதொலைபேசி இணைப்புக்களை வழங்கத்திட்டமிட்டுள்ளதுடன் வருட இறுதிக்குள் 5ஆயிரம் பேருக்கு புதிய இணைப்புக்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- இப்படிக் கூறினார் ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கர்.

யாழ். தொலைத்தொடர்பு நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய பரிவர்த்தனை நிலையத்தை நேற்று வைபவரீதியாக திறந்துவைத்து உரையாற்றுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

பரிவர்த்தனை நிலையம் ஊடாக முதலாவது தொடர்பை பிரதமருடன் அமைச்சர் பாக்கீர் மாக்கர் ஏற்படுத்திப் பேசினார். இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனும் 'ரெலிக்கொம்' நிறுவனத் தலைவர் திலங்க சுமதிபாலவும் இந்த இணைப்பு ஊடகப் பிரதமருடன் பேசினர்.

"யாழ். மக்களுக்கான தரைப்பாதை திறந்தாயிற்று. தொலைபேசி சேவையும் கிடைத்துவிட்டது. எனவே வடக்கும் தெற்கும் இணைந்து விட்டதுதானே" என்று தொலைபேசியில் பிரதமர் கேட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதன் பின்னர் பாக்கீர் மாக்கார் அங்கு பேசுகையில் மேலும் கூறியதாவது:-

யாழ்ப்பாணத்திற்கு கடந்த தடவை வந்தசமயம் இங்குள்ள மதத் தலைவர்களும் கல்விமான்களும் இரு முக்கிய கோரிக்கைகளை முன்வைத்தனர். ரூபவாஹினியை இங்கு பார்க்க

(12ஆம் பக்கம் பார்க்க)



ரெலிக்கொம்மின் புதிய பரிவர்த்தனை நிலையத்தை அமைச்சர்கள் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் (இடது), மகேஸ்வரன் ஆகியோர் இணைந்து நாடாவை வெட்டி திறந்துவைப்பதைப் படத்தில் காணலாம். *(படம்: தேவராஜன்)*

### அமைச்சர் மகேஸ்வரன் இன்று பிரதமருடன் சந்தித்துப் பேச்சு!

யாழ்ப்பாணம்,செப்.12

இந்து சமய கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் இன்று நண்பகல் 12 மணியளவில் அலரிமாளிகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துப் பேசவுள்ளார்.

நேற்று மாலை இந்தச் சந்திப்புக் குறித்துத் தனக்கு தெரியப்படுத்தப்பட்டதாக அமைச்சர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது பிரதமருக்குத் தான் அண்மையில் எழுதிய கடிதம் குறித்தும் கடந்த 10 நாள்களாக அரசுக்கும் தனக்கும் இடையில் இடம்பெற்றுவரும் இழுபறி குறித்தும் ஆராயவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இன்றைய பேச்சுக்கள் வெற்றிகரமாக அமையும் என்று தான் கருதுவதாகவும் அவர் கூறினார். (ம)

## 19ஆவது அரசமைப்பு சட்டத்திருத்தம் நாடாளுமன்றைப் பலப்படுத்துவதற்கே

### அரசு எம்.பிக்கள் குழுக்கூட்டத்தில் பிரதமர்

கொழும்பு,செப்.12

நாடாளுமன்றத்தைப் பலப்படுத்துவது என்ற ஒரே நோக்கத்துடனேயே அரசமைப்பின் 19ஆவது சட்டத்திருத்தம் அறிமுகப்படுத்தப்படுகிறது.

மற்றப்படி, எந்த ஒரு தனிநபரினதும் அதிகாரங்களை ஒடுக்கும் நோக்கத்தில் அது வடிவமைக்கப்படவில்லை.

இப்படிக் கூறியிருக்கிறார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

நாடாளுமன்றக் கூட்டத் தொகுதியில் நேற்று அரசு நாடாளுமன்றக் குழுவில் உரையாறுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

அரசமைப்பு மீதான இந்தத் திருத்தம் தற்போதைய முரண்பாட்டு அரசியலிலிருந்து விலகி நாடாளுமன்றத்துள் விட்டுக்கொடுக்கக் கூடிய தன்மையை உருவாக்கும்.

ஜனாதிபதி மாத்திரமன்றி பொ.ஐ.

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# விளையாட்டு

## ஐ.சி.சி. சம்பியன் போட்டிகள் இன்று கொழும்பில் ஆரம்பம்!

ஐ.சி.சி.கிண்ணக் கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று ஆரம்பமாகவுள்ளது. கொழும்பு ஆர்.பிரேமதாஸ அரங்கிலும் எஸ்.எஸ்.ஸி. அரங்கிலும் எதிர்வரும் 29ஆம் திகதிவரை இப்போட்டிகள் நடைபெறவுள்ளன. உலகக் கிண்ணத்திற்கு அடுத்ததாக இரண்டாவது மிகப்பெரிய சர்வதேச கிரிக்கெட் சுற்றுப்போட்டி இதுவாகும்.

12 நாடுகள் இப்போட்டிகளில் கலந்துகொள்கின்றன. சர்வதேச சிரேஷ்ட அணிகளுக்கிடையில் இலங்கையில் நடைபெறும் மிகப்பெரிய சுற்றுப் போட்டியாகவும் ஐ.சி.சி. சுற்றுப் போட்டி விளங்குகிறது. இச்சுற்றுப் போட்டி ஐ.சி.சி. நொக்அவுட் சுற்றுப்போட்டி எனும் பெயரில் 1998இல் ஆரம்பமானது. முதலாவது போட்டி பங்களாதேஷில் நடத்தப்பட்டது. அத்தொடரின் இறுதிப்போட்டியில் மேற்கிந்திய அணியை தோற்கடித்து தென்னாபிரிக்க அணி சம்பியனாகியது.

இரண்டாவது சுற்றுப்போட்டி 2000 ஆம் ஆண்டில் கென்யாவில் நடைபெற்றது. அத்தொடரின் இறுதிப் போட்டியில் இந்திய அணியை நியூஸிலாந்து அணி வென்றது.

இவ்வருடம் இந்தியாவில் இப்போட்டிகள் நடைபெறவிருந்தன.

ஆனால், இந்திய கிரிக்கெட் சபை போட்டியை நடத்த முடியாதென சிலமாதங்களுக்கு முன்னர் அறிவித்தது. இதனால் போட்டியை நடத்தும் வாய்ப்பு இலங்கைக்கு கிடைத்துள்ளது.

முன்னைய இரு போட்டிகளைப் போன்றல்லாது பல மாற்றங்களைக் கொண்டதாக இம்முறை ஐ.சி.சி. சம்பியன் கிண்ணப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

'நொக்-அவுட்' முறை நீக்கப்பட்டு ஆரம்பச் சுற்று லீக் முறையில் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்க மாற்றமாகும். இதன்படி ஒவ்வோர் அணியும் குறைந்தபட்சம் இரு போட்டிகளில் விளையாடும் வாய்ப்பு உள்ளது.

ஒவ்வொரு குழுவிலும் முதலிடம் பெறும் அணிகள் அரையிறுதிப் போட்டிகளுக்கு தெரிவு செய்யப்படவுள்ளன.

'நொக்-அவுட்' முறை நீக்கப்பட்டதால் இத்தொடரின் பெயரும் ஐ.சி.சி.சம்பியன் கிண்ணப் போட்டி" என மாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முதன்முறையாக எல்.பி.டபிள்யு முதலான தீர்ப்புகளுக்கு மூன்றாவது நடுவரின் ஆலோசனை பெறப்படவுள்ளமையும் விசேடமானதாகும்.

இச்சுற்றுப் போட்டியில் சம்பியனாகும் அணி மூன்று லட்சம் அமெரிக்க டொலர்களைப் (சுமார் 3 கோடி ரூபா) பணப்பரிசாகப் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அரையிறுதிப் போட்டிகளில் வெற்றிபெறும் அணிகள் தலா 1,25,000 டொலர்களையும் ஆரம்பச் சுற்றுப் போட்டிகளில் வெற்றியீட்டும் அணிகள் 50,000 டொலர்களையும் பெறவுள்ளன.

மொத்தமாக 11 லட்சத்து 50 ஆயிரம் டொலர்கள் பரிசுகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. இவை தவிர பங்குபற்றும் நாடுகள் அனைத்துக்கும் தலா 1,65,000 டொலர் நிதி வழங்கப்படவுள்ளது.

### அணிகள் விவரம்:

குழு 1 : ஆஸ்திரேலியா, பங்களாதேஷ், நியூஸிலாந்து.
குழு 2 : இங்கிலாந்து, இந்தியா, ஸிம்பாப்வே.
குழு 3 : கென்யா, தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத்தீவுகள்.
குழு 4 : ஒல்லாந்து, பாகிஸ்தான், இலங்கை.

### போட்டி அட்டவணை:

| திகதி | அணிகள் | மைதானம் |
|---|---|---|
| 12செப். | இலங்கை - பாகிஸ்தான் | பிரேமதாஸ |
| 13செப். | தென்னாபிரிக்கா - மேற்கிந்தியத்தீவுகள் | எஸ்.எஸ்.ஸி |
| 14செப். | இந்தியா - ஸிம்பாப்வே | பிரேமதாஸ |
| 15செப். | ஆஸ்திரேலியா - நியூஸிலாந்து | எஸ்.எஸ்.ஸி. |
| 16செப். | இலங்கை - ஒல்லாந்து | பிரேமதாஸ |
| 17செப். | மேற்கிந்தியா - கென்யா | எஸ்.எஸ்.ஸி. |
| 18செப். | இங்கிலாந்து - ஸிம்பாப்வே | பிரேமதாஸ |
| 19செப். | ஆஸ்திரேலியா - பங்களாதேஷ் | எஸ்.எஸ்.ஸி |
| 20செப். | தென்னாபிரிக்கா - கென்யா | பிரேமதாஸ |
| 21செப். | பாக்கிஸ்தான் - ஒல்லாந்து | எஸ்.எஸ்.ஸி |
| 22செப். | இங்கிலாந்து - இந்தியா | பிரேமதாஸ |
| 23செப். | நியூஸிலாந்து - பங்களாதேஷ் | எஸ்.எஸ்.ஸி |

### பிரதமர் அதிதி

ஐ.சி.சி. சம்பியன் கிண்ணப் போட்டிகளின் ஆரம்ப வைபவம் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு ஆர்.பிரேமதாஸ விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார். கோலாகலமான கலாசார நிகழ்ச்சிகளும் ஆரம்ப வைபவத்தில் இடம்பெறவுள்ளது. அலங்கார யானைகளின் ஊர்வலமும் இதில் இடம்பெறவுள்ளது.

ஆயிரம் நடனக் கலைஞர்கள், இருநூறு ட்ரம்ஸ் இசைக் கலைஞர்கள் ஆகியோரும் இசை நடன நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவர்.

'வைல்ட் - .'.பயர்' இசைக் குழுவினர் போட்டியின் உத்தியோகபூர்வ பாடலைப் பாடவுள்ளனர்.

இவ்வைபவத்தில் ஐ.சி.சியின் பிரதம நிறைவேற்று அதிகாரி மல்கம் ஸ்பீட், ஐ.சி.சி. சம்பியன் கிண்ணத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிப்பார். அதன்பின் பிரதமர் போட்டிகளை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைப்பார்.

அதையடுத்து ஐ.சி.சி. கிண்ணத் தொடரின் முதலாவது போட்டி ஆரம்பமாகவுள்ளது. இலங்கை - பாகிஸ்தான் அணிகள் இப்போட்டியில் மோதவுள்ளன.

(ம)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், செப்.12

யாழ்.உதைபந்தாட்ட லீக் நடத்தும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4மணிக்கு பாஷையூர் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

★ மாலை 4 மணி - சென். அன்ரனீஸ் வி.க.'பி' அணி எதிர் சென். மேரிஸ் வி.க. அணி

★ மாலை 5.15 மணி - கலைவாணி வி.க. அணி எதிர் பாரதி வி.க. அணி. (ம-ரி)

☆ ☆ ☆

வலி.வடக்கு,செப்.12

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விபரம் வருமாறு:-

14 வயதுப் பிரிவு

★ இணுவில் இந்துக் கல்லூரி எதிர் குப்பிளான் விக்னேஸ்வரா வித்தியாலயம்.

★ உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம் எதிர் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

16 வயதுப் பிரிவு

★ உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம் எதிர் சுன்னாகம் மயிலணி மகாஜனா வித்தியாலயம்.

★ ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம் எதிர் இணுவில் இந்துக் கல்லூரி

★ கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி எதிர் கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாலயம்.

(ம-86)

## வடக்கு - கிழக்கு உள்ளூராட்சித் தேர்தல்:
# மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களுடன் தேர்தல் ஆணையாளர் நாளை சந்திப்பு!

கொழும்பு,செப்.12

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கவுக்கும் வடக்கு - கிழக்கில் உள்ள மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் இடையேயான விசேட கலந்துரையாடல் ஒன்று நாளை 13ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

வடக்கு - கிழக்கில் எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் பற்றி இக்கலந்துரையாடலில் ஆராயப்படவுள்ளது.

தேர்தல் நடத்துவது, நடத்துவதில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள் மற்றும் நிலைப்பாடுகள் பற்றி மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களிடம் தேர்தல் ஆணையாளர் கேட்டறியவுள்ளார். உள்ளூராட்சி தேர்தல் இடம்பெறுவது பற்றி இன்னமும் முழுமையான நம்பிக்கை மக்கள் மத்தியிலும் அரசியல் கட்சிகள் மத்தியிலும் ஏற்படாத நிலையில் அதற்கான அலுவல்கள் இடம்பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது. (ம-12)

## குப்பிவிளக்கு வெடித்து தம்பதியர் காயம்

தென்மராட்சி,செப்.12

எண்ணெய் நிரம்பிய குப்பி விளக்கு வெடித்துச் சிதறியதில் குடும்பப் பெண் ஒருவர் எரிகாயங்களுக்கு இலக்கான சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு துன்னாலை மேற்கு தக்குச்சம்பாதி என்னும் இடத்தில் இடம்பெற்றுள்ளது.

மனைவியின் உடையில் தீப்பற்றி எரிந்ததைக் கண்டு அதனைக் கையினால் அணைக்க முயன்ற கணவனும் எரிகாயங்களுக்கு இலக்கானார்.

இதே இடத்தைச் சேர்ந்த நவரத்தினம் தயாநிதி (வயது 38) க.நவரத்தினம் (வயது 42) ஆகியோர் எரிகாயங்களுக்கு இலக்கான நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (எ-117)

## மேயர் சிவபாலன் நினைவு தினம் அனுஷ்டிப்பு

யாழ்.மாநகரசபையின் முன்னாள் முதல்வர் அமரர் பொன்.சிவபாலனின் நான்காவது ஆண்டு நினைவு தினம் நேற்று மாநகரசபை அலுவலகத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

நேற்று மாலை 4 மணியளவில் முதல்வர் செ.கந்தையன் தலைமையில இடம்பெற்ற இந்த நினைவுதின நிகழ்வில் மாநகர ஆணையாளர் இ.இராமலிங்கம், சபையின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் கலந்துகொண்டனர்.

அமரரின் உருவப்படத்துக்கு மாலை அணிவிக்கப்பட்டதுடன் உறுப்பினர்களாலும், உத்தியோகத்தர்களாலும் மலரஞ்சலி செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து அஞ்சலி உரைகளும் இடம்பெற்றன. ஆணையாளர் இ.இராமலிங்கம் உறுப்பினர்களான மு.தவநாதன், மனுவல் மங்களநேசன், செ.இருதயராயன் ஆகியோர் உரையாற்றினார்கள். (ம-10)

## வாந்திபேதி விழிப்புணர்வு நடவடிக்கை

யாழ்ப்பாணம்,செப்.12

குடாநாட்டில் தற்போது வேகமாகப் பரவிவரும் வாந்திபேதி நோயைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் அந்த நோய் குறித்த விழிப்புணர்வு நடவடிக்கைகளை சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இது தொடர்பான துண்டுப்பிரசுரங்கள் குடாநாட்டின் பல பகுதிகளிலும் ஒட்டப்பட்டு வருவதுடன், ஆங்காங்கே கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள் என்பனவும் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த விழிப்புணர்வு நடவடிக்கைகளுக்கு யுனிசெவ் நிறுவனம் ஆதரவு வழங்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, வாந்திபேதி நோய் குறித்த அறிகுறிகள், தடுப்பு வழிகள், ஆலோசனைகள் என்பன அடங்கிய துண்டுப் பிரசுரங்களும் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. (எ-4)

## தமிழ் விழா

யாழ்ப்பாணம்,செப்.12

யாழ்.பெரியபுலம் மகா வித்தியாலயத்தின் தமிழ்விழா நிகழ்வுகள் இன்று முற்பகல் 9.30 மணி முதல் வித்தியாலய மண்டபத்தில் செல்வி பியா.சங்கீதா தலைமையில் நடைபெறவுள்ளன.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் செ.திருநாவுக்கரசு இந்த விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளுவார்.

மங்கள இசை, அமைதி வணக்கம், தமிழர் பண், குரு இசை,கவிதை, வில்லிசை, குரு நடனம், நாடகம் மற்றும் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறும். (எ)

## காவலரண் தீயிடப்பட்ட சம்பவம்:
# மீனவர் சங்கத் தலைவரும் மற்றோர் இளைஞரும் கைது!

யாழ்ப்பாணம்,செப்.12

கடந்த 2ஆம் திகதி பருத்தித்துறையில் உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் புகுந்து காவலரண ஒன்றுக்கு தீவைத்தனர் என்று கூறப்படும் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற பெயரில் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்ட பருத்தித்துறை மீனவர் சங்கத் தலைவரும் மற்றோர் இளைஞரும் அன்றைய தினமே பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தில் படையினருக்கு இரண்டு இலட்சத்து 45 ஆயிரம் ரூபா பொருள் சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்தே அவர்களைப் பொலீஸார் கைது செய்தனர் எனத் தெரியவருகிறது.

பருத்தித்துறை கொட்டடியைச் சேர்ந்தவர்களான ஆறுமுகம் விக்னராசா (வயது 47), இராசதுரை உதயசீலன் (வயது 29) ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்கள் இருவரையும் எதிர்வரும் 23ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற நீதிவான் அ.பிரேம்சங்கர் உத்தரவிட்டார்.

பருத்தித்துறை பொலீஸார் நேற்று முன்தினம் இருவரையும் யாழ். சிறைச்சாலையில் ஒப்படைத்தனர்.

பருத்தித்துறை மீனவர் சங்கத் தலைவர் கைது செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக குடாநாட்டிலுள்ள மீனவர் சங்கங்கள் தமது கடுமையான கண்டனத்தை வெளியிட்டுள்ளன. அவரை விடுவிக்காதவிடத்து இந்த அமைப்புகள் எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தத் திட்டமிட்டிருப்பதாகவும் தெரியவந்தது. (ஐ-4-12)

# போக்குவரத்துக் கழகம் மறுப்புத் தெரிவிப்பு

"தனியார் சங்கம், புலிகள் இணைந்து யாழ்ப்பாணத்துக்கு பஸ் சேவை" என்ற தலைப்பில் கடந்த 10 ஆம் திகதி 'உதயனி'ல் வெளிவந்த செய்தி தொடர்பாக தமிழீழப் போக்குவரத்துக் கழகத்தின் பொறுப்பாளரால் கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

"அந்தச் செய்தி எமக்கு பெரும் வியப்பைத் தருகிறது. அச்செய்தியில் குறிப்பிட்டதுபோல் இணைந்து பஸ் சேவை நடத்துவது குறித்து நாம் யாரிடமும் பேசவில்லை அத்தகைய எண்ணமும் எமக்கு இல்லை" - என்று போக்குவரத்துக் கழகப் பொறுப்பாளர் தெரிவித்திருக்கிறார்.

*ஆசிரியர் குறிப்பு:*

கொழும்பில் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவரை மேற்கோள்காட்டியே எமது செய்தி பிரசுரமாகியிருந்தது. (ஆர்)

# பட்டதாரி ஆசிரியருக்கு முன்சேவைப் பயிற்சி

யாழ்ப்பாணம்,செப்.12

புதிதாக நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கு சேவை முன்பயிற்சி வழங்கப்படவுள்ளது.

கடந்த ஜுலை 15 ஆம் திகதியும், அதன் பின்னரும் யாழ்.மாவட்டத்திலும், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மடு, மன்னார், வன்னி ஆகிய கல்வி வலயங்களில் பட்டதாரி ஆசிரியர்களாக நியமனம் பெற்றவர்கள் இந்தப் பயிற்சியில் பங்குகொள்ளலாம் என்று சேவை முன்பயிற்சித் திட்டத்தின் இணைப்பாளரும், வலிகாமம் கல்வி வலயப் பணிப்பாளருமான வீ.இராசையா அறிவித்துள்ளார்.

மேற்படி பயிற்சி எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் 9 தினங்கள் வதிவிடப் பயிற்சியாக மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும் என்றும் -

சம்பந்தப்பட்டவர்கள் எதிர்வரும் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு முன்னர் போதிய ஆயத்தங்களுடன் மேற்படி நிலையத்தில் தமது பெயர் விவரங்களைப் பதிவு செய்துகொள்ளவேண்டும் என்றும் - அவர் அறிவித்துள்ளார். (எ)

# நாவலர் மணி மண்டபத்தில் வெள்ளிதோறும் சமய நிகழ்வு

யாழ்ப்பாணம்,செப்.12

நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றிலில் உள்ள நாவலர் மணி மண்டபத்தில் பிரதி வெள்ளிதோறும் சமய நிகழ்வுகளை நடத்துவதற்கு இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி நாளை வெள்ளிக்கிழமை மாலை 5 மணிமுதல் 6 மணி வரை யாழ்.இந்துக் கல்லூரியின் முன்னாள் உப அதிபர் க.சிவராமலிங்கம் 'சைவ வாழ்வு' என்னும் பொருளில் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் யாழ். பிராந்திய உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் இந்நிகழ்வுக்குத் தலைமை வகிப்பார். (எ)

# ஆயுதங்கள் திருடிவிற்ற சிப்பாய் தப்பியோடி வந்தபோது கைது!

கொழும்பு,செப்.12

பாதாள உலகக் கோஷ்டிகளுக்கும் கொள்ளைக் கும்பல்களுக்கும் ஆயுதங்கள் விற்பதில் ஈடுபட்டிருந்த ஒரு சிப்பாய் தெரணியகலை பகுதியில் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டார். இவர் இராணுவத்தில் இருந்து தப்பியோடி வந்த ஒருவராவார்.

கைதானவர் தெரிவித்த தகவலின் பேரில் ரி-56 ரக துப்பாக்கி ஒன்றும் 30 தோட்டாக்களும் கைப்பற்றப்பட்டன. கொள்ளைக் கும்பல் ஒன்றின் தலைவர் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஓர் இராணுவ முகாமில் இவர் சேவையாற்றியபொழுது அங்கிருந்து துப்பாக்கியும் தோட்டாக்களும் திருடப்பட்டன என்பது பொலீஸ் விசாரணையில் தெரியவந்திருக்கிறது. (ம)



பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் உள்ள அமெரிக்கத் தூதரகம் முன்பாக நேற்று அமெரிக்க எதிர்ப்பாளர்கள் ஆர்ப்பாட்டம் நடத்திய போது எடுத்தபடம்.

செப்ரெம்பர் - 11 தாக்குதலால் ஏற்பட்ட பாதிப்புகளைப் பார்த்தாவது ஈராக் மீதான தாக்குதலை அமெரிக்கா நிறுத்திக்கொள்ளவேண்டும் என அவர்கள் வலியுறுத்தினர்.

# தமிழ்க் கும்பாபிஷேகத்தால் தமிழகத்தில் பெரும் சர்ச்சை!

புதுடில்லி,செப்.12

தமிழகத்தின் கரூரில் உள்ள அம்மன் ஆலயம் ஒன்றில் தமிழில் கும்பாபிஷேகச் சடங்குகள் இடம்பெற்றமை அங்கு பலத்த சர்ச்சைகளை உருவாக்கியுள்ளது.

மேற்படி அம்மன் ஆலயத்துக்கு அப்பகுதியைச் சேர்ந்த பக்தர்கள் பணம் திரட்டி இராஜகோபுரம் அமைந்திருந்தனர். இந்தக் கோபுரத்தின் கும்பாபிஷேகச் சடங்குகளை முற்றுமுழுதாகத் தமிழ் மொழியிலேயே நடத்த அவர்கள் விரும்பி அதற்கான ஏற்பாடுகளையும் செய்தனர்.

இதற்கு அர்ச்சகர்கள் மற்றும் காஞ்சி சங்கராச்சாரியார் போன்றோரிடமிருந்து கடும் எதிர்ப்புக் கிளம்பியது.

கும்பாபிஷேகத்தின்போது சமஸ்கிருத மொழியில் வேதமந்திரங்கள் கூறப்பட்டாலேயே பயன்கிடைக்கும் என்றும் - தமிழ் மொழியில் அந்தச் சடங்குகள் நடத்தப்பட்டால் எவ்வித பயனும் கிடைக்காதென்றும் - காஞ்சி சங்கராச்சாரியார் அறிக்கைவிட்டார்.

உலக அரங்கில்

இந்தக் கருத்துக்கு பிராமண அர்ச்சகர்களும் ஆதரவு தெரிவித்தனர்.

பிரச்சினை பெரிதாகவே தமிழக அரசின் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சு இந்த விவகாரத்தில் தலையிட்டது.

ஆனால், இரு தரப்பும் தத்தமது வாதங்களில் பிடிவாதம் காட்டவே அமைச்சு நிலைமையைச் சமாளிக்க முடியாமல் திணறியது. இறுதியாக வேறு வழியின்றி பிரச்சினைக்குரிய கும்பாபிஷேகத்தை பிற்போடும்படி யோசனை கூறிவிட்டு தமிழக இந்து அறநிலையத்துறை அமைச்சு ஒதுங்கிக் கொண்டது.

இந்த நிலையில், அர்ச்சகர்களின் கருத்துக்களை புறந்தள்ளிவிட்டு அம்மன் பக்தர்கள் தமது ஆலயத்தில் தாம் கட்டிய கோபுரத்துக்கு தமது விருப்பப்படி தமிழில் கும்பாபிஷேகத்தை நடத்தி முடித்துள்ளனர்.

தேவார திருவாசக பாராயணம், தமிழ்ப் பண்ணிசை ஆகியவை முழங்க குறிப்பிட்ட அம்மன் ஆலயத்தின் தமிழ்க் கும்பாபிஷேகம் நடந்தது.

தமிழகத்தில் மக்கள் பிரச்சினைகள் எத்தனையோ இருக்கும்போது, கடவுள் வழிபாட்டில் மொழியை ஒரு சாரார் பிரச்சினையாக்குவதற்கு தமிழக மக்கள் மத்தியில் கடும் அதிருப்தி நிலவுவதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழக இந்து ஆலயங்களில் பெரும்பாலானவற்றில் ஆகம விதிப்படி சமஸ்கிருத மொழியிலேயே பூசைகள் இடம்பெற்று வருகின்றன. முன்னர் திராவிட முன்னேற்றக்கழக அரசின் ஆட்சிக்காலத்தில் இந்த ஆலயத்தில் தமிழ் மொழியிலும் அர்ச்சனைகள் நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதற்கு அப்போது குறிப்பிட்ட ஒரு சாராரிடம் இருந்து கடும் எதிர்ப்புக் கிளம்பியது. ஆயினும், அப்போதைய இந்து அறநிலையத்துறை அமைச்சராக இருந்த தமிழ்க் குடிமகன் இந்த விதியை நடைமுறைப்படுத்தினார். இதனால் இன்றும் மதுரை மீனாட்சி அம்மன் ஆலயம் உட்பட பிரசித்திபெற்ற கோயில்களில் பக்தர்கள் கேட்பதன் அடிப்படையில் தமிழில் அர்ச்சனைகள் செய்யப்படுகின்றன. இந்தச் சூழ்நிலையில் இடம்பெற்ற தமிழ்க் கும்பாபிஷேகம் மீண்டும் தமிழில் வழிபாடு நடத்துவது குறித்த சர்ச்சையை தமிழகத்தில் கிளப்பியுள்ளதாகக் கூறப்படுகிறது. (ஒ)

# இந்தியாவில் பயணிகள் ரயில் தடம்புரண்டு ஆற்றில் வீழ்ந்தது!

## 100இற்கும் மேற்பட்டோர் பலி!!

புதுடில்லி,செப்.12

இந்தியாவில் 'ஹௌரா புதுடில்லி ராஜ்தானி எக்ஸ்பிரஸ்' ரயில் பீகாரில ஆற்றில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் பயணம் செய்த 100இற்கும் மேற்பட்டோர் பலியானார்கள்; 150 பேருக்கும் மேல் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் உடனடியாக அவுரங்காபாத் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஹௌராவிலிருந்து கடந்த திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு புறப்பட்ட ராஜ்தானி எக்ஸ்பிரஸ் ரயில் இரவு 10.40 மணியளவில் கயா அருகே ஆற்றில் கவிழ்ந்தது.

16 பெட்டிகள் தடம்புரண்டதில் 11 பெட்டிகள் ஆற்றில் கவிழ்ந்தன. 5 பெட்டிகள் பாலத்திலிருந்து அந்தரத்தில் தொங்கியபடி இருந்தன. அந்தரத்தில் தொங்கிய பெட்டிகளில் இருந்தவர்கள் தங்களைக் காப்பாற்றுமாறு கூக்குரல் எழுப்பியவாறு இருந்தனர்.

இச்சம்பவம் இரவில் நடந்துள்ளது. தற்போது அங்கு தொடர்ந்து மழைபெய்து வருவதால் மீட்புப் பணிகளில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக கிழக்கு ரயில்வே வட்டாரங்கள் தெரிவித்தன. எனினும் இதுவரை 50 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

விபத்து பற்றிய தகவல் அறிந்ததும் இந்திய ரயில்வே அமைச்சர் நிதீஷ்குமார் மற்றும் ரயில்வே பொது மேலாளர் எம்.எஸ்.ராணா ஆகியோர் சம்பவ இடத்திற்கு விரைந்தனர்.

பீகார் மாநில ராணுவ பொலீஸாரும் மீட்புப் பணிகளில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். அவுரங்காபாத்திலிருந்து மருத்துவக் குழுக்கள் சம்பவ இடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

விபத்து பற்றிய தகவல் அறிய ஹௌரா, தன்பாத், அலகாபாத், கான்பூர் மற்றும் டில்லி ரயில் நிலையங்களில் சிறப்பு விசாரணை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. (ஒ)



இந்தியாவில் விபத்துக்குள்ளான பயணிகள் ரயிலின் பெட்டிகள் ஒன்றின் மேல் ஒன்று விழ்ந்து கிடக்கும் காட்சி.

# காஷ்மீர் அமைச்சர் லோன் நேற்றுச் சுட்டுக்கொலை!

புதுடில்லி,செப்.12

இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மாநில சட்ட அமைச்சர் முஸ்தாக் அஹமட் லோன் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மாநிலத் தலைநகர் ஸ்ரீநகரில் இருந்து வடமேற்கே குப்வாரா மாவட்டத்தில் நேற்று இச்சம்பவம் இடம்பெற்றது.

தனது ஆதரவாளர்களுடன் தேர்தல் பிரசாரத்தில் லோன் ஈடுபட்டுக் கொண்டிருந்ததாகவும் - அப்போது அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரிகள் நடத்திய தாக்குதலில் அவர் அந்த இடத்திலேயே உயிரிழந்ததாகவும் - தெரிவிக்கப்பட்டது.

மாநில முதலமைச்சர் பரூக் அப்துல்லாவின் தேசிய மாநாட்டுக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் லோனும் ஒருவராவார்.

எதிர்வரும் 16ஆம் திகதி இடம்பெறவுள்ள சட்டசபைத் தேர்தலின் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தபோதே இவர் கொல்லப்பட்டார். (ஒ)

# சதாமுக்கு எதிரான நடவடிக்கைக்கு அனைவரும் ஆதரவு தரவேண்டும்!

## பிரிட்டிஷ் பிரதமர் கோரிக்கை

சதாம் ஹுசேனுக்கு எதிராக எடுக்கும் நடவடிக்கைகளுக்கு அனைத்து நாடுகளும் ஆதரவு தரவேண்டும் என்று பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் கோரியுள்ளார்.

வர்த்தக ஐக்கிய காங்கிரஸ் என்ற அமைப்பு லண்டனில் நடத்திய கூட்டம் ஒன்றில் பிரதமர் பிளேயர் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

'ஐ.நா.சபையின் எச்சரிக்கையையும் மீறி ஈராக் பெருமளவில் ஆயுதங்களை குவித்துள்ளது. இது சர்வதேச அளவில் பெரும் ஆபத்தை ஏற்படுத்தும். ஐ.நா. சபையின் உத்தரவுகளை மதிக்க சதாம் ஹுசேன் தவறிவிட்டார்.

'சர்வதேச அளவில் சட்டத்துக்கு புறம்பாக செயல்படும் சதாம் ஹுசேன் மீது நடவடிக்கை எடுக்கவும், அவர் குவித்துள்ள ஆயுதங்களை அழிக்கவும் ஐ.நா.சபை முடிவு செய்தது. எனவேதான் அதற்கான நடவடிக்கையில் நாங்கள் ஈடுபட்டுவருகிறோம். இந்த முயற்சிக்கு அனைத்து நாடுகளின் ஆதரவு தேவை. சதாம் ஹுசேனுக்கு எதிராக எடுக்கப்படும் இந்த நடவடிக்கைக்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு தரவேண்டும்' - இவ்வாறு அவர் பேசினார்.

# அனுதாப வாக்குக் கிடைக்கும் என்று பெனாஸிர் நம்பிக்கை

துபாய்,செப்.12

ஒக்ரோபர் மாதம் நடக்கவிருக்கும் பாகிஸ்தான் நாடாளுமன்றத் தேர்தலில் முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோ, நவாஷ் ஷெரீப் ஆகிய இருவரும் போட்டியிடக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

துபாயில் தங்கியிருக்கும் பெனாஸிர் தேர்தல் பற்றிக் கருத்துத் தெரிவித்திருக்கிறார். 'எனது மக்கள் கட்சிக்கும், நவாஸ் ஷெரீப்பின் முஸ்லிம் லீக் கட்சிக்கும் மக்களிடம் அனுதாப வாக்குக் கிடைக்கும். எங்களைக் கண்டு முஷாரப்பின் இராணுவ ஆட்சி பயப்படுகிறது. ஆகவேதான் தேர்தலில் எங்களைப் போட்டியிடமுடியாமல் தடை செய்திருக்கிறது என்று பெனாஸிர் கூறினார். இந்தத் தேர்தலில் பெனாஸிர், நவாஸ் ஷெரீப் ஆகிய இருவரது கட்சிகளும் கூட்டணி அமைத்து இருக்கிறது' என்று கூறப்படுகிறது. (ஒ)

# பிரான்ஸில் விநாயகசதுர்த்தி

பாரீஸில் விநாயகர் சதுர்த்தி விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்பட்டது. இதில் 5 ஆயிரத்துக்கும் மேலான இந்துக்கள் கலந்துகொண்டனர்.

பிரான்ஸ் நாட்டில் முதன்முதலாக விநாயகர் சதுர்த்தி விழா 1995 ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டது. அதுமுதல் ஆண்டுதோறும் இந்துக்கள் இவ்விழாவைக் கொண்டாடி வருகின்றனர்.

இலங்கை, இந்தியா, நேபாளம், வியட்நாம், மொரீஷியஸ், மடகஸ்கர் ஆகிய நாடுகளைச் சேர்ந்த இந்துக்கள் சுமார் ஒரு லட்சம் பேர் பிரான்ஸில் வசித்து வருகின்றனர்.

## பிரான்ஸில் வெள்ளம்!

பிரான்ஸில் கடும்புயல் மழைகாரணமாக 20 பேர் உயிரிழந்துள்ளனர். தெற்கு பிரான்ஸில் கடந்த இருநாள்களாக கடும் புயல் வீசியது பெரும் மழையும் பொழிந்தது. இதனால் அங்கு



பாரிய வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. மின்சாரம், ரயில் மற்றும் வீதிப் போக்குவரத்து தொலைபேசித் தொடர்பு ஆகியவை துண்டிக் கப்பட்டுவிட்டன.

மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பிய பிரதேசத்தில் வெள்ளப் பாதிப்பு ஏற்பட்ட ஒரு வார காலத்தில் பிரான்ஸும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## மசூதியில் சோதனை

லண்டன்,செப்.12

ஜேர்மனியின் ஹம்பேர்க் நகரில் உள்ள அல் நூர் மசூதியில் நேற்றுக் காலை சோதனை நடத்திய பொலீஸார் அங்கு தங்கியிருந்த ஒருவரைக் கைது செய்தனர்.

மேற்படி நபர் மசூதிக்குள் தங்கியிருந்த இடத்தில் வெடிபொருள்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

# பின்லேடன் டெலிவிஷனில் தோன்றினார் அமெரிக்கத் தாக்குதலுக்கு பொறுப்பேற்பு!

டோகா,செப்.12

பின்லேடன் தொலைக்காட்சியில் தோன்றி அமெரிக்கா மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு பொறுப்பேற்றுள்ளார்.

சர்வதேச தீவிரவாதி ஒசாமா பின்லேடன் கடந்த ஆண்டு செப்ரெம்பர் 11ஆம் திகதி அமெரிக்கா மீது நடத்திய தாக்குதல் உலகை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

இதைத் தொடர்ந்து ஆப்கானிஸ்தானில் இருந்த பின்லேடனை ஒழித்துக் கட்ட அமெரிக்கா மேற்கொண்ட முயற்சிக்கு பலன் கிடைக்கவில்லை.

பின்லேடன் எங்கு இருக்கிறார் என்பது மர்மமாகவே இருந்து வந்தது. இந்த நிலையில் பின்லேடன் கட்டார் நாட்டுத் தொலைக்காட்சியான 'அல் ஜசீராவில்' கடந்த 9ஆம் திகதி தோன்றி பேட்டி அளித்தார். அப்போது அமெரிக்க தாக்குதலுக்குத் தனது அமைப்பே பொறுப்பு என்று கூறினார்.

தாக்குதலில் ஈடுபட்ட சிலரது பெயர்களையும் அவர் குறிப்பிட்டார்.

குறிப்பாக முகமது அட்டா தலைமையில் தாக்குதல் நடந்ததாகவும் - அமெரிக்க வர்த்தக மையத்தை இவரது தலைமையிலான குழுவே தகர்த்ததாகவும் - பின்லேடன் கூறினார்.

செப்ரெம்பர் 11 தாக்குதல் நினைவு தினத்துக்கு இரு நாள்கள் இருந்த நிலையில் பின்லேடன் இந்தப் பேட்டியை அளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

# முஷாரப்பை கொல்லச் சதி!

கராச்சி,செப்.12

பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பை கொல்ல சதித் திட்டம் தீட்டியதாக 5 பேரை பொலீஸார் கைதுசெய்தனர். இவர்களில் ஒருவர் கடற்படைத் தீயணைப்புப் பிரிவு ஊழியர்.

கராச்சி கடற்படைக் கப்பல் தளத்துக்கு அருகே கடந்த ஏப்ரல் 27ஆம் திகதி நெடுஞ்சாலைத் திட்டத்துக்கு அடிக்கல் நாட்டச் சென்றார் முஷாரப். அப்போது அவரைக் கொல்ல நவீன துப்பாக்கிகள், எறிகுண்டுகளை அப்பகுதிக்கு இந்த 5 பேரும் கொண்டு சென்றதாக பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

எனினும் 3 மணி நேரம் தாமதமாக நிகழ்ச்சிக்கு முஷாரப் சென்றதால் இவர்களின் சதித்திட்டம் நிறைவேறவில்லை.

கைதான 5 பேரும் அல்கெய்டா அமைப்புடன் தொடர்புடைய அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகிறது.

இதே அமைப்பைச் சேர்ந்த 3 பேர் கடந்த ஏப்ரல் 26ஆம் திகதி நடந்த வேறொரு விழாவில் கார்க் குண்டு மூலம் முஷாரப்பைக் கொல்ல சதித்திட்டம் தீட்டியதாக ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளனர்.

முஷாரப்பை கொலை செய்யும் திட்டம் நிறைவேறாத நிலையில், இந்த மூன்று பேரும் கடந்த ஜூன் மாதம் 14ஆம் திகதி கராச்சியில் உள்ள அமெரிக்க தூதரக வளாகம் மீது குண்டு நிரப்பப்பட்ட காரை ஏற்றி தகர்த்தனர். இதில் 12 பாகிஸ்தானியர் இறந்தனர். (ஒ)

# சு.கட்சி பொதுச் செயலாளரின் சகோதரருக்கு விளக்கமறியல்!

கப்பம் வாங்கும் கோஷ்டி ஒன்றுக்கு கைக்குண்டு ஒன்றை வழங்கினார் எனக் கூறப்படும் ஒரு சம்பவம் தொடர்பாக பொலீஸார் தேடிய கபில சிறிசேன என்பவர் பொலன்னறுவை நீதிமன்றத்தில் சரணடைந்தார். அவர் எதிர்வரும் 23 ஆம்திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேனவின் சகோதரரான இவருக்கு வேறு ஒரு வழக்கில் வழங்கப்பட்டிருந்த பிணையை பொலன்னறுவை நீதிவான் ரத்துச் செய்தார்.

புலிகளின் வேடத்தில் மன்னம்பிட்டி மக்களிடம் கப்பம் வாங்கியதாகக் கூறப்படும் ஒரு கோஷ்டியைச சேர்ந்த ஒருவருக்கு கபில சிறிசேன கைக்குண்டு ஒன்றை வழங்கினார் எனக் கூறப்பட்டது (ஐ)


புதிய ஆரம்பம் நெல்லியடியில்

**FUJI COLOUR LAB**

பின்வரும் பதவிகளுக்கு தகைமையுடையவர்களை எதிர்பார்க்கின்றோம்.

1. PHOTO PRINTER(Technician)
2. காசாளர் *(பெண்கள் - வடமராட்சி வாசிகள் மட்டும்)*
3. தொழில்நுட்ப உதவியாளர் *(இருபாலாரும்)*

☛ புகைப்படத்துறை அனுபவமுள்ளவர்கள், பயிற்சி பெற விரும்புவர்கள் வரவேற்கப்படுவர்.

வயது: 20 - 40

முன் அனுபவம், கல்வித் தகைமை, நற்சான்றிதழ்களுடன் 13.09.2002ஆம் திகதிக்கு முன்னர் நேரில் வரவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:

**ஜமுனா ஸ்ரோர்ஸ்**

பிரதான வீதி, நெல்லியடி. T.P.: 021 - 63217

உங்கள் ஞாபகங்களை எங்கள் படச்சுருளில் சேமியுங்கள்.

(8170)



PX

**RELIABLE TV BOOSTER AT REASONABLE PRICE**






NEW MODEL
A-35
VHF-UHF
• சக்தி (பெறுதல்) 35db
• வேறு சத்தங்கள் இல்லை
• தண்ணீர் உட்புகாத முழுமையான உறை

Most Popular TV Booster In Sri Lanka

TV CENTRE
4, Keyzer Street, Col-11.Tel: 434742

PX MANUFACTURED BY GOVERNMENT APPROVED "A" GRADE QUALITY CONTROL FACTORY IN TAIWAN (C/23769)


## தவறணை தாக்குதல் குறித்து விசாரணை

கடந்த ஓகஸ்ட் மாதம் 16ஆம் திகதி நாரந்தனையில் உள்ள கள்ளுத் தவறணையில் வைத்து ஏழு பொதுமக்கள் மீது சிவில் உடையில் வந்த கடற்படையினர் தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பான விசாரணைகள் நேற்றுமுன்தினம் முற்பகல் மனித உரிமைகள் ஆணைக்குழுவின யாழ்.அலுவலகத்தில் நடைபெற்றன.

இவ்விசாரணைகளின்போது அங்கு பிரசன்னமாகியிருந்த ஊர்காவற்றுறை கடற்படைப் பொறுப்பதிகாரி, மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் மேற்படி தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டபோதும் அதற்கு சமுகமளிக்காமைக்கு மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகளிடம் மன்னிப்புக் கேட்டதாகவும்-

இத்தாக்குதலில் ஈடுபட்ட கடற்படையினர் மீது தாம் தகுந்த நடவடிக்கை எடுத்துள்ளதோடு இதுதொடர்பான பூரண அறிக்கையை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக இணைப்பாளரிடம் எழுத்துமூலம் சமர்ப்பிப்பதாகத் தெரிவித்ததாகவும்-

மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக இணைப்பாளர் ஆர்.பி.சந்திரசேகர கூறியுள்ளார்.

இத்தாக்குதல் சம்பவத்தின் போது ஊர்காவற்றுறை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க கிளையில் ஏற்பட்ட சேதத்திற்கு கடற்படையினரால் 25 ஆயிரம் ரூபா பணம் நஷ்டஈடாக வழங்கப்பட்டமை தெரிந்ததே. (ஒ-ரி)


**சுயதொழில் வாய்ப்பு இலகுமுறை பிறின்ரிங்**

இயந்திரம் இன்றி வாழ்த்து மடல், துண்டுப்பிரசுரம், தலையணைஉறை, ரீ சேட் இன்னும் பலவற்றில் பிறின்ரிங் செய்யும் பயிற்சி நெறி.

ஆரம்பம்: 25.09.2002

**'சிவம் ஜீ'**

மயூரா எலெக்ரிக்கல்ஸ்

301, நாவலர் றோட்,

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

(8190)



## பட்டதாரி ஆசிரியர்கள், நூலகர் தேவை

வன்னியிலுள்ள நிறுவனம் சார்ந்த பாடசாலைகளுக்கு பின்வரும் பாடங்களைக் கற்பிப்பதற்கு பட்டதாரி ஆசிரியர்கள் தேவை.

▲ கணிதம் ▲ விஞ்ஞானம்
▲ தமிழ் ▲ ஆங்கிலம்
▲ வணிகக்கல்வி ▲ புவியியல்

அத்துடன் நூலகர் ஒருவரும் தேவை.

விண்ணப்பதாரர் விண்ணப்பங்களைத் தமது சொந்தக் கையெழுத்தில் தயாரித்து தகைமையை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன், கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் "பட்டதாரி ஆசிரியர்கள்/ நூலகருக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிட்டு 15.09.2002இற்கு முன் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**விளம்பர இல.1637**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

நேர்முகத் தேர்வு 22.09.2002 ஞாயிற்றுக்கிழமை யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

(8186)


## 27 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 30 - 05 - 1914



மறைவு 30 - 08 - 1975

### அமரர் இ.செல்லையா அவர்கள்

(சன்லைற் றைக்கிளீனேர்ஸ் ஸ்தாபகர்)

அன்பின் திருவுருவே! பண்பின் பிறப்பிடமே!!
ஆண்டுகள் 27 சென்றாலும்
அப்பாவே நீர் எமக்கு அணையாத தீபமாய்
ஒளிவீட்டுப் பிரகாசிக்கிறீர்!

அன்புடன் நினைவு கூரும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

*30/2, மருதடி லேன், நல்லூர்.*

(8172)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்

## வேலாயுதம் செல்வநாயகம்

(செல்வம்)

*(யாழ்.பெரியகடை, திருநெல்வேலி வர்த்தகர்)*

மலர்வு 12-12-1952

உதிர்வு 14-08-2002

**திதி: 13.09.2002**

*அன்புடனும் பண்புடனும் வாழ்ந்து*
*அமரராகிவிட்ட எங்கள் அன்புத் தெய்வமே!*
*புன்சிரிப்புத் தவழும் உங்கள் முகத்தை*
*இனி நாம் காண்பதெப்போ?*
*உங்களுடன் வாழ்ந்த நாள்களை*
*என்றும் எங்களால் மறக்கவே முடியாது அப்பா!*

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

2002.08.14ஆம் திகதி புதன்கிழமை அவர்களின் மரணச் செய்தி கேட்டு எமது இல்லம் நாடி ஓடோடி வந்து எமது துன்பத்தில் பங்கேற்று, எமக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறி உதவிகள் செய்த அயலவர்கள் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள், வர்த்தகர்கள் அனைவருக்கும் மற்றும் துண்டுப்பிரசுரம்மூலம் கண்ணீர் அஞ்சலிகளை வெளியிட்டோர், உள்நாட்டிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும், தொலைபேசிமூலம், கடிதமூலம் அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோர் மேலும் வைத்திய உதவி உடனிருந்து புரிந்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (2002.09.12) வியாழக்கிழமை அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் காலை 8.00 மணிக்கு வில்லூன்றிப் புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (2002.09.13), வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறவிருக்கும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன வைபவத்திலும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் தவித்திடும்:
**திருமதி பத்மாவதி செல்வநாயகம்,**
மகள்: **ரேணுகா,**
மகன்: **லவன்ராஜ்.**

*இல.687/28, மானிப்பாய் வீதி,*
*ஒட்டுமடம்,*
*யாழ்ப்பாணம்.*

(8176)

# உதயன்

## நாட்டுக்கு நல்லதையே செய்ய வேண்டும்

'யாழ்.குடாநாட்டில் உயர் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனம் செய்யப்பட்டிருக்கும் பகுதிகளில் உள்ள படையினரின் நிலைகள் எக்காரணம் கொண்டும் நகர்த்தப்படமாட்டா.'

இப்படி அடித்துக் கூறியிருக்கிறார் யாழ்.மாவட்ட படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா.

நேற்றுமுன்தினம் கல்வியாளர்களுடன் நடைபெற்ற சந்திப்பிலேயே இவ்வாறு - இராணுவத்துக்கே உரிய மிடுக்கோடு - உறுதியாகக் கூறியிருக்கின்றார் அவர்.

சமாதானப் பேச்சுக்களின் முன்னேற்றத்தைப் பொறுத்தே மக்களின் அபிலாஷைகள் தீர்த்து வைக்கப்படும். பாடசாலைச் சுற்றாடலில் உள்ள படையினரும் இதனடிப்படையிலேயே வெளியேறுவர் என்றும் அவர் ஆணித்தரமாகக் கூறியிருக்கின்றார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பது குறித்து விடுதலைப் புலிகளின் தலைவர் பல தடவைகள் - நீண்டகாலமாக - திருப்பித்திருப்பிச் சுட்டிக்காட்டி வந்ததை இங்கு மீள் கவனத்திற்குக் கொண்டு வருவது பொருத்தமானது.

ஒரு நல்லெண்ணப் புறச்சூழலில் - இயல்பு நிலையில் - விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட்டு, அரசோடு சம ஸ்தானத்தில் அமர்ந்திருந்து சமாதானப் பேச்சு நடத்தப் புலிகள் தயார் - இவ்வாறுதான் தலைவர் வே.பிரபாகரன் அடிக்கடி வலியுறுத்தி வந்தார்.

இந்த அடிப்படை அம்சத்தை ஏற்றுத்தான் விடுதலைப் புலிகளோடு சமாதானப் பேச்சுக்களை நடத்தப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு முன்வந்தது.

யுத்தம் நிறுத்தப்பட்டதும், பாதைகள் திறக்கப்பட்டதும், புலிகள் மீதான தடை நீக்கப்பட்டதும்கூட இந்த அடிப்படையில்தான்.

இப்படி இயல்பு நிலைக்கு வழிகோலிய பின்னரே சமாதான முயற்சி முன்னகரத் தொடங்கியது. அது இப்போது அரசும் புலிகளும் தாய்லாந்தில் ஒரு மேசையில் அமர்ந்திருந்து சமரசப் பேச்சு நடத்தும் நிலைமைக்கு முன்னேறியிருக்கிறது.

இந்நிலையில், இயல்புநிலையை ஒரு கேள்விக்குறியாக்கி, தனது இராணுவப் பாணித்திட்டத்தை குடாநாட்டு மக்கள்மீது திணிக்க முயலும் வடபகுதி இராணுவத் தளபதியின் போக்கு தமிழ் மக்களால் ஜீரணிக்க முடியாதது; கண்டிக்கத்தக்கது; சமாதானமுயற்சிகளைக் குழப்பும் நோக்கிலானதோ என்ற ஐயத்தைத் தருவது.

மக்கள்குடியிருப்புகளுக்கு மத்தியில் நிலைகொள்வதும், வைத்தியசாலைகள், பாடசாலைகள் போன்ற பொது இடங்களுக்கு அருகில் முகாமிட்டுத் தங்கள் பாதுகாப்பை உறுதிசெய்து கொள்வதும் தந்திரோபாய உத்திகளாக இருக்கலாம். ஆனால், அப்படியான இடங்களை உயர் பாதுகாப்பு வலயங்கள் என்று வெகு 'ஸிம்பிள்' ஆகக் குறிப்பிட்டு மக்களை ஏமாற்ற முயலக் கூடாது.

யாழ்.நகரின் மத்தியில் வைத்தியசாலைக்குப் பின்னால் - வைத்தியசாலை மதிலோடு - இருக்கும் உல்லாசக் ஹோட்டல்கள்தான் பாதுகாப்புக்கு உகந்தவை; கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தவை; இராணுவ உயர் அதிகாரிகள் நிலைகொள்ள உகந்தவை என்று கூறுவது யாழ். குடாநாட்டுமக்களின் காதில் பூச்சுற்றும் முயற்சி.

'மனமுண்டானால் இடமுண்டு' என்பதே உண்மை.

குடாநாட்டில் இருந்து பிரச்சினைகள் எழக் கூடாது. குடாநாட்டுக் குழப்பம் சமாதானப் பேச்சுக்களைப் பாதிக்க இடம்கொடுக்கக் கூடாது. மக்களின் நியாயபூர்வமான - இயல்பு வாழ்க்கைக்கு வழிசெய்கின்ற - கோரிக்கைகளுக்கு விட்டுக்கொடுத்து சுமுகமாக இணங்கிப் போக வேண்டும். இப்படிப் படைத்தலைமை கருதுமானால் இங்கு பிரச்சினைக்கே இடமில்லை.

அதைவிடுத்து, பாதுகாப்பு என்ற பலூனை பூதாகாரமாக ஊதிப் பருக்கவைத்து நிலைமையை மோசமாக்க நினைத்தால் அதையும் செய்யலாம்..

தமக்கும், நாட்டுக்கும், தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் அடங்கலாக நாட்டின் அனைத்து மக்களிற்கும் எது நல்லது என்று தீர்மானித்து அதைச் செய்வதுதான் படைத்தரப்புக்கு நல்லது.



தெல்லிப்பழை யூனியன் கல்லூரி நேற்றுமுன்தினம் முதல் அதன் சொந்த இடத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது. அதற்கான ஆரம்ப வைபவத்தில் கலந்துகொண்ட பிரமுகர்களையும் பாடசாலை சமூகத்தினரையும் படங்களில் காணலாம். *(படங்கள்: தேவராஜன்)*

# யாழ்.பொது அமைப்புக்கள் ஊடாகவே 'நோவிப்' திட்டங்கள் செயற்படுத்தப்படும்

## கலந்துரையாடலில் ஆலோசகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.12

'நோவிப்' எனப்படும் சர்வதேச அபிவிருத்திக்கும் கூட்டமைப்புக்குமான நெதர்லாந்து அமைப்பினால் யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்கள் குறித்து ஆய்வுகளை மேற்கொண்ட பின்னர் இங்குள்ள பொது அமைப்புகளின் ஊடாகவே அந்தத் திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

- இவ்வாறு தெரிவித்தார் அந்த அமைப்பின் ஆலோசகர் டுலான் டி சில்வா.

நேற்று முற்பகல் 10 மணியளவில் யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகளுடன் இணையப்பணிமனையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் தெரிவித்ததாவது:-

"கடந்த பல வருடங்களாகத் தென்பகுதியில் பல்வேறு வேலைத்திட்டங்களை மேற்கொண்டுவரும் எமது அமைபபானது தற்போது ஏற்பட்டுள்ள சமாதானச் சூழ்நிலையையடுத்து வடக்கு-கிழக்கிலும் அதனை விஸ்தரிக்கவுள்ளது. அதன் முதற்கட்டமாகவே நாம் இங்கு வருகை தந்துள்ளோம்.

"எமது அமைப்பானது நேரடியாக எந்த வேலைத்திட்டங்களிலும் ஈடுபடுவதில்லை. வேறு பொது அமைப்புக்களுக்கு நிதியை வழங்கி அவற்றின்மூலமே திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது. எமது அமைப்பிடம் பாரிய நிதிவசதியுள்ளது. அவற்றைப் பயன்படுத்தி மக்களின் தேவைகளை நிறைவேற்றி வருகின்றோம். இதற்கான நிதியினை நெதர்லாந்து அரசே வழங்கி வருகிறது. குறிப்பாக வறுமை ஒழிப்பு, அடிப்படையான சமூகப் பணிகள், மனித உரிமைகளைக் கட்டிக்காத்தல், சமூக அமைப்புகளைக் கட்டி எழுப்புதலும், சமூக அநீதிகளைத தட்டிக்கேட்டலும் போன்ற விடயங்களுக்கு நாம் முன்னுரிமை வழங்கிவருகின்றோம்.

"எனவே, இங்குள்ள பிரச்சினைகளைக் கண்டறிந்து, அது பற்றி இங்குள்ள பொது அமைப்புக்களுடன் கலந்துரையாடல்களை நடத்தவே இங்கு வந்துள்ளோம்" எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலின்போது இணையப் பிரதிநிதிகளால் யாழ்.மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளில் நிலவும் வைத்தியர்கள் மற்றும் ஊழியர்கள் பற்றாக்குறை, மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தில் நிரந்தர வாகனப் பரிசோதகர் இல்லாத நிலையில், சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாதோரிடம் பொலீஸார் குற்றப்பணம் அறிவிடுகின்றமை போன்ற விடயங்கள் பற்றியும் எடுத்துக்கூறப்பட்டது.(ஒ-10)

### யாழ்.பல்கலைக்கழகத்தில்

# இரு ஆண்டு மாணவரையும் இணைத்து கல்விச் செயற்பாடு

யாழ்ப்பாணம்,செப்.12

ஏற்கனவே யாழ்.பல்கலைக்கழகத்தில் தமது பதிவுகளை மேற்கொண்டுள்ள - 2001 ஆம் ஆண்டில் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக்கழக அனுமதிபெற்ற - மாணவர்களுடன், இந்த ஆண்டு ஏப்ரலில் ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி யாழ்.பல்கலைக்கழகத்துக்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களும் இணைக்கப்பட்டு ஒன்றாகவே அடுத்த மாதம் யாழ்.பல்கலைக்கழகத்தில் கற்றல் செயற்பாடுகளுக்காக உள்வாங்கப்படவுள்ளனர்.

இத்தகவலை யாழ்.பல்கலைக்கழகப் பதிவாளர் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இரு ஆண்டுகளுக்குரிய மாணவர்களையும் ஒன்றாக உள்வாங்குமாறு யாழ்.பல்கலைக்கழகத்துக்கு, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு ஆலோசனை வழங்கியுள்ளது. இருப்பினும் இந்த ஆண்டு ஏப்ரலில் ஜி.சீ.ஈ. உயாதரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் வெட்டுப்புள்ளி விவரங்கள் இதுவரை வெளியாகவில்லை. இத்தாமதம் காரணமாக இரு ஆண்டுகளுக்குமுரிய மாணவர்களையும் ஒன்றாக இணைத்து கல்விச் செயற்பாடுகளை ஆரம்பிப்பதில் நடைமுறைச் சிக்கல்கள் தோன்றியுள்ளன. எவ்வாறாயினும் முதல் வருடத்தின் இரண்டாம் அரையாண்டு காலப்பகுதியில் அவர்கள் ஒன்றாக இணைந்து கல்விச் செயற்பாடுகளை • முன்னெடுப்பார்கள் என்று அவர் தெரிவித்தார். (ஒ-9)

### பருத்தித்துறைப் பகுதியில்

# பேரணிப் பதற்றத்தின்போது கைவிடப்பட்ட பொருள்கள்

## ஒரு பகுதி மட்டும் மீட்பு

கரவெட்டி,செப்.12

ஹாட்லிக் கல்லூரிப் பகுதியில் கைவிடப்பட்ட சைக்கிள்கள மற்றும் பாடசாலைப் பைகள் போன்ற உடைமைகள் பாடசாலை நிர்வாகத்திடம் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற மாணவர் பேரணியின் போது ஏற்பட்ட பதற்ற நிலையையடுத்து, கைவிடப்பட்ட சைக்கிள்கள், பாடசாலை பைகள் போன்ற உடைமைகள் சில பாடசாலை நிர்வாகத்திடம் இருப்பதாகவும் -

அவைகளை மாணவர்களிடம் மீள வழங்கவுள்ளதாகவும் -

ஹாட்லிக் கல்லூரி உபஅதிபர் எஸ்.சிவானந்தன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்:-

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற அசம்பாவிதத்தின்போது மாணவர்களின் சில உடைமைகள் பாடசாலை வளாகத்தில் கைவிடப்பட்டதாக மாணவர்கள் மூலமும் பெற்றோர் மூலமும் பாடசாலை நிர்வாகத்திடம் முறையிடப்பட்டது.

இதனையடுத்து நாம் அங்கு தேடியபோது சில சைக்கிள்கள் புத்தகப்பைகள் போன்றவற்றை மட்டுமே எம்மால் மீட்க முடிந்தது. ஆனால், அவற்றைவிட கைவிடப்பட்டதாகக் கூறப்படும் பொருள்கள் அதிகம் என்பதால் நாம் பருத்தித்துறை பொலீஸ் நிலையத்தில் தேடுதல் சம்பந்தமான முறைப்பாடு ஒன்றைச் செய்துள்ளோம். இது குறித்த பொலீஸ் நடவடிக்கைகள் முடிந்த பின்னரே காணாமற்போன பொருள்கள் பற்றிய மதிப்பீட்டையும் மீட்கப்பட்ட உடைமைகளை மீள அளிப்பது பற்றியும் முடிவு எடுக்கமுடியும் என்று அவர் தெரிவித்தார். (ஒ-70)

### நாளை

ஆவணி 28
வெள்ளிக்கிழமை
(13.09.2002)
திதி : ஷப்தமி
மாலை 6.02 வரை
நட்சத்திரம்: அனுஷம்
நண்பகல் 11.51 வரை.
கரிநாள்
சுபநேரம் : 06.03 - 07.33
ராகுகாலம் : 10.33 - 12.03
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

வளமாகும் முன்னர் செலவு செய்பவன் இறப்பதற்கு முன்னர் இரக்க நேரிடும்.

# மந்திரிமனை புனரமைக்க ரூ.4 லட்சம் நிதி ஒதுக்கீடு

வலி.வடக்கு,செப்.12

நல்லூர் முத்திரைச் சந்தைக்கு அண்மையிலுள்ள புராதன சரித்திரச் சின்னமான மந்திரிமனையைத் திருத்தியமைப்பதற்கென யாழ்.மாவட்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களால் நான்கு லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த மனை சரியான முறையில் பராமரிப்பின்றி பழுதடைந்து சிதைந்து போய்க்கொண்டிருக்கின்றது. கடந்த காலத்தில் இவ் அரண்மனையில் ஒரு குடும்பம் இருந்தபோதிலும், வரலாற்று சின்னம் என்ற அடிப்படையில் அங்கிருந்து அவர்கள் வெளியேற்றப்பட்டனர்.

இந்த நிலைமையிலேயே தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இம்மந்திரிமனை சிதைவடையாமல் பாதுகாக்கும் முன்னேற்பாட்டு நடவடிக்கையாக பன்முகப்படுத்திய வரவு-செலவுத் திட்டத்தின்கீழ் இந்த நிதியை ஒதுக்கீடு செய்துள்ளனர்.

இதேபோன்று சங்கிலிய அரசன் நீராடியதாகக் கருதப்படும் ஜமுனாரிக் கேணியும் சங்கிலித்தோப்பும் அப்பகுதியில் குடியிருப்பவர்களினால் சேதப்படுத்தப்பட்டு வருகின்றன. அதனையும் உரிய முறையில் நிதி ஒதுக்கி பாதுகாக்க நடவடிக்கையெடுக்கப்பட வேண்டுமென மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் சங்கிலியன் தோப்பு உட்பட சரித்திரச் சின்னங்களைப் பாதுகாக்க குழுவொன்று அமைக்கப்பட்டபோதிலும் அது செயற்பாடின்றி ஒதுங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ஒ-86)

# சிகரெட் புகைத்தபடி வானுக்கு பெற்றோல் நிரப்புவது குற்றம்!

## சாரதிக்கு 50 ரூபா தண்டம்

யாழ்ப்பாணம்,செப்.12

சிகரெட் புகைத்தவாறு 'வான்' ஒன்றுக்கு 'பெற்றோல்' நிரப்பிய அதன் சாரதிக்கு சுன்னாகம் பொலீஸார் 50 ரூபா தண்டம் விதித்தனர்.

நேற்றுமுன்தினம் சுன்னாகம் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

எரிபொருள் விற்பனை நிலையம் ஒன்றின் முன்னால் தனது 'ஹைஏஸ்' வானை நிறுத்திய சாரதி, சிகரெட் புகைத்தபடியே அங்கு போத்தல் ஒன்றில் பெற்றோலை வாங்கி வானுக்கு நிரப்பிக்கொண்டிருந்தார்.

அப்பொழுது அவ்வீதியால் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த பொலீஸார் இதனை அவதானித்து சாரதியின் செயலைத் தடுத்துநிறுத்தினர்.

சிகரெட் புகைத்தபடியே வாகனத்துக்கு எரிபொருள் நிரப்புவது ஆபத்தானது என்பதால் இனிமேல் அவ்வாறு செய்ய வேண்டாம் என அறிவுறுத்தியதுடன், அவரிடம் இருந்து 50 ரூபாவை தண்டமாகவும் அறவிட்டனர்.

வாகன இயந்திரம் இயங்கிக்கொண்டிருக்கும் வேளையில் அதற்கு எரிபொருள் நிரப்புவதும் தண்டனைக்குரிய குற்றமாகும் என்று பொலீஸார் தெரிவித்தனர். (ஒ-4)

# மூன்றாவது பிறந்தநாள் வாழ்த்து
## 12.09.2002



# செல்வன் சஜீந்தன்

அல்வாய் மாதாங்கோயிலடியைச் சேர்ந்த
திரு.திருமதி யோகேஸ்வரன் – இரத்தினகுமாரி
தம்பதிகளின் செல்வப் புதல்வன்

## சஜீந்தன்

தனது மூன்றாவது பிறந்தநாளை இன்று (12.09.2002) வியாழக்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அன்பு அக்கா கார்த்திகா, அம்மம்மா, அப்பம்மா, ஜேர்மனியில் வசிக்கும் பெரியமாமா, அத்தை, பெரியத்தான், குட்டி அத்தான், பிரான்ஸில் வசிக்கும் ஆசைமாமா, சின்னமாமா, கொழும்பில் வசிக்கும் பெரியப்பா குடும்பம், மூத்தமாமா குடும்பம், அத்தை குடும்பம், மாமா மார், அத்தைமார், அப்பப்பாமார், அப்பம்மாமார், அம்மப்பாமார், அம்மம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார், பாட்டாமார், பாட்டி மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் கண்ணகை அம்பாளின் அருள்பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

*மாதாங்கோவிலடி,*
*அல்வாய் தெற்கு.* (8122) - குடும்பத்தினர்.

# குழந்தைகள் பராமரிப்பாளர்கள் தேவை

**வேதனம் 3000/- மேல் உணவு, தங்குமிடம் இலவசம்.**

வன்னியிலுள்ள குழந்தைகள் காப்பகத்திற்கு குழந்தைகளைப் பராமரிப்பதற்குப் பொருத்தமான பெண்களிடமிருந்து வேண்டுகைகள் 19.09.2002இற்கு முன் எதிர்பார்க்கப்படுகின்றன. விதவைகள், அநாதைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

*தொடர்பு:*
விளம்பர இல.1636
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(8185)

# ஆண்டுகள் இரண்டு கரைந்தனவோ கண்ணீரில்?

கண்மகிழ்
26
-
07
-
1977



கண் நெகிழ்
09
-
04
-
2000

## செல்வி நுதர்சினி நடராசா *(தர்சா)*

*(ஆசிரியை, யாழ். வடகைதடி குருசாமி மகாவித்தியாலயம்)*
*திதி: 12-09-2002 வளர்பிறை சஷ்டி*

அன்புக்கினியவளே! ஆசைக்கொரு மகளே!
இக்கணமும் உன் இழப்பை உண்மையென யார் நினைப்பார்?
எக்கணமும் உன் நினைவே, என்னுயிரே என் மகளே!
விண்ணுலகில் சாந்திபெற எம் அஞ்சலியை ஏற்றிடுவாய்!

*என்றென்றும் உன் நினைவால் துயர் அடையும்:*
அப்பா, அம்மா,
அண்ணன், தம்பி,
உற்றார், உறவினர்கள்.

*நீர்வேலி றோட்,*
*கைதடி வடக்கு,*
*கைதடி.* (8104)

## வல்லிபுர கோயிலில் படக்காட்சி

வடமராட்சி,செப்.12

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயிலில் நடைபெற்றுவரும் வருடாந்த மஹோற்சவத்தை ஒட்டி உற்சவ தினங்களில் மகாபாரதம் திரைப்படக் காட்சி காண்பிக்கப்பட்டு வருகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்ற உற்சவ தினத்தன்று ஆரம்பமான இக்காட்சி, தினமும் இரவு 7 மணிமுதல் 11மணிவரை கோயில் வீதியில் நடைபெற்றுவருகிறது. மஹோற்சவத்தின் இறுதித்தினமான எதிர்வரும 22ஆம் திகதிவரை இக்காட்சி இடம்பெறும். (ஒ-173)

## சிங்கள இளைஞர் இங்கு விளையாட்டு

கொழும்புத்துறை,செப்.12

யாழ்.சிங்கள மகா வித்தியாலய மைதானத்தில மாலை வேளைகளில் தென்பகுதியில் இருந்து யாழ். வந்த இளைஞர்கள் விளையாட்டுக்களில் ஈடுபடுவதைக் காணமுடிகிறது.

கடந்த இரு தசாப்தங்களுக்கு முன்னர் இவ்விடத்தில் அமைந்திருந்த பாடசாலை வன்செயலில் சேதமடைந்தது. அதன் பின்னர் முதல்முறையாக இவ்வாறாக சிங்கள இளைஞர்கள் விளையாடும் நிலை தற்போது உருவாகியுள்ளதாகக் கூறப்படுகிறது. (ஒ-ரி)

## அமரர் அஷ்ரப்புக்கு நினைவு முத்திரை

காரைதீவு,செப்.12

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவரும், முன்னாள் அமைச்சருமான காலஞ்சென்ற எம்.எச்.எம்.அஷ்ரப்புக்கு நினைவு முத்திரை வெளியிடப்படவிருக்கிறது.

அம்பாறை மாவட்ட மு.கா.நாடாளுமன்ற உறுப்பினரும், மு.கா.பிரதி தேசிய அமைப்பாளருமான எம்.ஐ. அன்வர் இஸ்மாயில், மக்கள் தொடர்பு சாதனத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காருடன் முத்திரை வெளியீடு தொடர்பாகக் கலந்துரையாடியுள்ளார். முத்திரையை வெளியிட அமைச்சர் இணக்கம் தெரிவித்ததையடுத்து தபால் மாஅதிபர் ஆர்.பியசேனவைச் சந்தித்து அன்வர் இஸ்மாயில் எம்.பி. பேசியுள்ளார்.

முத்திரை வெளியீட்டுப் பணியகத்திற்கு, அஷ்ரப் முத்திரை வெளியீடு தொடர்பாக தபால் மாஅதிபர் அறிவுறுத்தியுள்ளார் எனத் தெரிய வருகிறது. (ஒ)

## மழை இன்றி விவசாயிகள் சிரமம்

சண்டிலிப்பாய்,செப்.12

சண்டிலிப்பாய்ப் பகுதியில் மழையின்மையால் வரட்சி நிலவுகிறது. இதனால், பெரும்பாலான நீர் நிலைகளில் தண்ணீர் வற்ற ஆரம்பித்துள்ளது. கிணறுகளிலும் நீர் மட்டம் மிகவும் குறைந்து வருகிறது.

இந்நிலையில், மேட்டு நிலங்களில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகள் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - காலபோக நெல் விதைப்பில் ஈடுபடவுள்ள விவசாயிகள் மழை இன்மையால் தங்கள் வயல் காணிகளை உழுது பண்படுத்த முடியாதுள்ளதாகக் கூறுகின்றனர். நெல் நாற்று மேடை போடுவதற்கும் மழை அவசியம் தேவைப்படும் நிலையில் விவசாயிகள் மழையை எதிர்நோக்கியுள்ளனர். (ஒ-135)

# கண்ணீர் அஞ்சலி

கைதடி அரசினர் ஆயுர்வேத வைத்தியசாலையில்
கடமையாற்றும்
**திருமதி சி.வரதலட்சுமி** அவர்களின்
அன்புத் தந்தையார் **தம்பையா தம்பிராசா**

அவர்கள் நேற்று (10.09.2002) செவ்வாய்க்கிழமை காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

*அரசினர்*
*ஆயுர்வேத வைத்தியசாலை,*
*கைதடி.* (8188)

வைத்தியப் பொறுப்பதிகாரி,
வைத்திய உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள்.

# ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு
31
-
03
-
1932



உதிர்வு
24
-
08
-
2001

## திருமதி நாகம்மா நடராசா

*(இளைப்பாறிய ஆசிரியை)*

திதி: ஷஷ்டி(12.09.2002)

எம் இல்லம் நிறைந்த உத்தமியே - இல்லறம்
உள்ளம் நிறைந்த வேதனையைத் தந்துவிட்டு
பொட்டோடும் பூவோடும்
பொன்னுலகம் போனதென்ன?

*பிரிவால் துயருறும்:*
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

*இணுவில் மேற்கு,*
*இணுவில்.* (8166)

# இரு விழிகளும் இமைக்க மறந்த ஏழாம் ஆண்டு எண்ண அலைகள்

ஓரடி
மண்ணில்
25
-
01
-
1963



ஆறடி
மண்ணில்
12
-
09
-
1995

## செல்வி சாந்தி மகேந்திரன் *(B.A., Trained)*

(ஆசிரியை, யா/அச்செழு சைவப்பிரகாச வித்தி.)

ஐயிரு மாதம் சுமந்தவளை
விட்டகன்று ஆண்டுகளும் ஏழாச்சோ!
பூத்துக் காய்த்துக் கனிவாயெனக்
காத்திருந்த நாங்கள் - நீ
மொட்டிலேயே கருகிய சோகத்தால்
பரிதவிக்கின்றோம் பாரினிலே
மீண்டொருகால் 'சாந்தி'யென
வாராயோ பாரிற்கு.....?
விதி வலிது தெரிகிறது
எனினும் மனம் பேதலிக்கிறது.

*உன் பிரிவால் துயருறும்:*
குடும்பத்தினர்.

*அச்செழு,*
*நீர்வேலி.* (8123)


இ.ம.க.

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சித்திரபானு வருடம் ஆவணி மாதம் 28ஆம் நாள்(13.09.2002) வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு உள்ள சுபவேளையில்

எனது புத்திரன்
**செல்வன் அன்ரனி ஆம்ஸ்ரோங் ஆனந்தராஜன்**
அவர்களுக்கும்



எனது புத்திரி
**செல்வி இராஜநாயகி**
அவர்களுக்கும்

நவாலி சென்.பீற்றர் தேவாலயத்தில் காலை 8 மணிக்கு நடைபெறும் திருமணத்திருப்பலியிலும் தொடர்ந்து மணமகள் இல்லத்தில் நடைபெறும் வரவேற்பு நிகழ்விலும் உடனிருந்து சிறப்பிக்கும்படி உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். 15ஆம் திகதி மணமகன் இல்லத்திலும் 16ஆம் திகதி மணமகள் இல்லத்திலும் நடைபெறவுள்ள வரவேற்பு நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

திரு.திருமதி அ.அமிர்தநாதன்
றோசாவாசா,
டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.



(இரு வீட்டார் அழைப்பு)

திரு.திருமதி அ.ஞானானந்தன்
அரசடி வீதி,
நவாலி தெற்கு, மானிப்பாய்.

(8128)

# பிரபாகரன் - சந்திரிகா இடையே நிலவும் வரலாற்று ஒற்றுமைகள்

## மாற்றார் தோட்டத்திலிருந்து...

*விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மற்றும் ஸ்ரீ ல.சு. கட்சியின் தலைவியும் நாட்டின் ஜனாதிபதியுமான சந்திரிகா பண்டாரநாயக்கா ஆகிய இருவரது வாழ்க்கையிலும் பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன. இந்தச் சமன்பாடுகள் குறித்து ஆராய்கிறது இக்கட்டுரை. உப்புல் யோசெப் பெர்னாண்டோவால் எழுதப்பட்டு "லங்காதீப" பத்திரிகையில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகின்றோம்.*

வேலுப்பிள்ளை பிரபாகரன் என்பவர் 1977இல் ஆட்சிக்கு வந்த ஐ.தே. கட்சியின் இனவாத அரசியலால் உருவாக்கப்பட்ட பாத்திரமாவார். சந்திரிகா பண்டாரநாயக்கா என்பவர் 1977இல் ஆட்சிக்கு வந்த ஐ.தே. கட்சியின் ஊழல் மற்றும் மோசடி நடவடிக்கைகளால் உருவாக்கப்பட்ட பாத்திரமாவார். 1977இல் ஆட்சிக்கு வந்து 17 ஆண்டுகளாக ஆட்சிசெய்த ஐ.தே.கட்சியின் ஆட்சி, முடிவுக்கு வந்ததும் இவர்கள் இருவராலேயே ஆகும். 1977இல் ஆட்சிக்கு வந்த ஐ.தே. கட்சி ஸ்ரீலங்காவை சிங்கப்பூர் போன்ற ஒரு நாடாக முன்னேற்றவுள்ளதாகத் தெரிவித்தது. அந்த அரசின் இந்தக் கனவு பிரபாகரனின் தமிழீழத்திற்கான யுத்தம் காரணமாகக் கலைந்தது. சந்திரிகா பண்டாரநாயக்கா அரசியல் தலைமைத்துவத்தை ஏற்காவிடின் 1977இல் ஆட்சிக்கு வந்த ஐ.தே.கட்சி இன்றுவரை தொடர்ந்து ஆட்சியில் இருந்திருக்கக்கூடும். இவற்றின்படி 1977 இல் ஆட்சிக்கு வந்த ஐ.தே.கட்சி அரசானது வீழ்ச்சியடைந்ததற்குக் காரணம் 1977 இல் ஆட்சிக்கு வந்த அந்த அரசால் உருவாக்கப்பட்ட இரு பாத்திரங்களே வேலுப்பிள்ளை பிரபாகரன மற்றும் சந்திரிகா பண்டாரநாயக்கா ஆவர்..

இன்றும் ஐ.தே.கட்சி அல்லது ஐ.தே.முன்னணி அரசின் எதிர்காலத்தை வேலுப்பிள்ளை பிரபாகரனாலும் சந்திரிகா பண்டாரநாயக்காவாலும் தீர்மானிக்கமுடியும். தற்போதைய அரசுக்கு நாட்டின் வடக்குக் கிழக்கின் உத்தியோகபூர்வமற்ற தலைவராக விளங்கும் வேலுப்பிள்ளை பிரபாகரனை நசுக்க வேண்டிய தேவையுள்ளது. அதேபோலவே நாட்டின் தலைவியான சந்திரிகா பண்டாரநாயக்காவையும் நசுக்கவேண்டிய தேவை உள்ளது. ஐ.தே.கட்சி அரசு தற்போது சமாதானத்தின்மூலம் பிரபாகரனை நசுக்கவும், இலகுவாக (சமாதானமாக்) நசுக்க முடியாத சந்திரிகா பண்டாரநாயக்காவை அரசமைப்புக்கான 18ஆவது திருத்தத்தின் மூலம் நசுக்கவும் முயற்சித்து வருகிறது.

ஐ.தே.கட்சியை அழிப்பதற்காக உருவான ஐ.தே.கட்சியின் தலையிடியாக அமைந்துள்ள - இந்த இரு பாத்திரங்களுக்கும் இடையே அபூர்வமான வரலாற்று ஒற்றுமைகள் உள்ளன. ஜனாதிபதி சந்திரிகா தனது தந்தையான எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்காவின் அரசியலுடனும் அரசுடனும் தனது சிறுபராயத்தைக் கழித்தார். வேலுப்பிள்ளை பிரபாகரன் எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்காவின் வகுப்புவாத அரசியலின்போது தனது சிறுபராயத்தைக் கழித்தார். பண்டாரநாயக்காவின் அரசியலும், அரசும் சந்திரிகாவுக்கு எதிர்கால அரசியல் தலைமைத்துவம் கிடைப்பதற்கு ஏதுவாய் அமைந்ததுபோலவே பண்டாரநாயக்காவின் இனவாத அரசியலால் உருவான இனப்பிரச்சினை (1958) வேலுப்பிள்ளை பிரபாகரன் எதிர்காலத்தில் ஆயுதப்போராட்டத்துக்குத் தலைமைதாங்கும் நிலைமையை உருவாக்கியது.

சந்திரிகா வெளிநாட்டில் தனது கல்வியை முடித்துக்கொண்டு 1970-77 காலப்பகுதியில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக இந்நாட்டிற்கு வந்தார். அப்போது தனது தாயாரான சிறிமாவின் அரசினால் ஜனவசு தோட்டத்துறையின் தலைவியாக நியமிக்கப்பட்டார். வேலுப்பிள்ளை பிரபாகரன் தனது ஆயுதப் போராட்டத்திற்கு காரணமான தனிநாடு அமைக்கும் தீர்மானம் வட்டுக்கோட்டை மகாநாட்டிலேயே அதே காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது. அவ்வேளையிலேயே யாழ். நகர பிதா அல்பிரட் துரையப்பா படுகொலை செய்யப்பட்டார்.

ஒரு புறத்தில் ஸ்ரீமாவின் அரசும், அரசியலும் சந்திரிகாவை அரசியலுக்குக் கொண்டுவந்தபோது மறுபுறத்தில் பிரபாகரன் ஆயுதப்போராட்டத்தில் ஈடுபட ஆரம்பித்தார்.

1977-83 காலப்பகுதியில் அரசியலுக்கு வந்த சந்திரிகா அந்த அரசியலில் தனது தலைமைத்துவத்தை உறுதிசெய்ய ஸ்ரீ ல.சு.கட்சிக்குள் அவருக்கு எதிரான குழுக்கள் மற்றும்



சக்திகளுடன் மோதிக்கொண்டிருந்த வேளையில் பிரபாகரன் ஆயுதப் போராட்டத்தில் தனது தலைமைத்துவத்தை உறுதி செய்வதற்காக தனக்கு எதிரான ஆயுதக் குழுக்கள் மற்றும் சக்திகளுடன் மோதிக்கொண்டிருந்தார். 1983ஆம் ஆண்டு இந்த இருவருக்கும் மிகவும் முக்கியமான ஆண்டாகும். அப்போது ஆட்சியில் இருந்த ஐ.தே.கட்சி அரசை நசுக்குவதற்கு அல்லது ஒழிப்பதற்கு இந்தியாவில் இருந்த இந்திராகாந்தியின் அரசு ஸ்ரீலங்காவின் உள்நாட்டு விடயங்களில் தலையிட ஆரம்பித்தது 1983 கறுப்பு ஜூலை சம்பவங்களை அடுத்தே ஆகும்.

அப்போது இந்திய அரசு வெளிப்படையாக வடக்குக் கிழக்கில் பிரபாகரனால் மேற்கொள்ளப்பட்ட யுத்தத்தை ஆதரித்தது போலவே தெற்கில் விஜய குமாரணதுங்க மற்றும் சந்திரிகாவின் மக்கள் கட்சியின் அரசியல் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பை வழங்கியது. ஸ்ரீலங்காவின் இன யுத்தத்திற்கு அரசியல்தீர்வு காணப்படவேண்டும் என வடக்கில் பிரபாகரனும் தெற்கில் விஜய குமாரணதுங்க சந்திரிகாவின் மக்கள் கட்சியும் தெரிவித்த கருத்தை இவ்வாறான பின்னணியிலேயே இந்திய அரசு ஏற்றுக்கொண்டது. இந்தியாவின் ஒத்துழைப்புடன் விஜய குமாரணதுங்க - சந்திரிகா ஆகியோர் தமிழ் ஆயுதக் குழுக்களின் தலைவர்களைச சந்தித்ததும், இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வினைத் தேடமுற்பட்டதும் இந்தக் காலகட்டத்திலேயே ஆகும். 1983-1987 காலப் பகுதியில் பிரபாகரனின் ஆயுதப் போராட்டமும் - சந்திரிகாவின் அரசியலும் இந்நாட்டின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வே தேவையானது என்ற சுலோகத்தை முன்னெடுத்தன. இதன் பின்னணியில் இந்தியா பாரிய பணிகளை நிறைவேற்றிக்கொண்டிருந்தது.

இதன் பிரதிபலனே 1987இல் கைச்சாத்திடப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தமாகும்.

தனது முயற்சிகளுக்குக் கிடைத்த வெற்றியே இலங்கை - இந்திய உடன்பாடு எனப் பிரபாகரன் நினைத்தார். தமது முயற்சிகளுக்குக் கிடைத்த வெற்றியே என விஜயவும், சந்திரிகாவும் நினைத்தனர். ஆனால், அவர்கள் நினைத்தவாறு நடக்கவில்லை. பிரபாகரன் ஒதுக்கப்பட்டார்; செயலிழக்க நேரிட்டது. சந்திரிகாவுக்கும் இவையே நடந்தன.

தென்பகுதியில் இலங்கை - இந்திய உடன்பாட்டை எதிர்த்தவர்கள் மற்றும் ஜே.வி.பியினரின் வன்முறைகள் காரணமாக சந்திரிகாவும், விஜய குமாரணதுங்கவும் ஒதுக்கப்பட்டனர்; செயலிழந்தனர். ஒப்பந்தத்தை எதிர்த்த காரணத்தால் பிரபாகரன் வன்னிக் காட்டிற்குச் சென்றவேளையில் ஒப்பந்தத்தை ஆதரித்த விஜய குமாரணதுங்க படுகொலை செய்யப்பட்டார். சந்திரிகாவுக்கு இந்நாட்டு அரசியலில் பிரகாசிக்க முடியாத நிலை உருவானது. ஜே.வி.பியினரின் வன்முறைகள் காரணமாக வீட்டிற்குள் முடங்கும்நிலை சந்திரிகாவுக்கு ஏற்பட்டது. அவ்வேளையில் பிரபாகரன் பின்வாங்கி வன்னிக் காட்டிற்குச் சென்றார். சந்திரிகா வெளிநாடு சென்று அங்கு தங்கினார்.

1987 - 1991 காலப்பகுதி சந்திரிகாவுக்கும் பிரபாகரனுக்கும் மற்றுமொரு முக்கிய காலகட்டமாக அமைந்தது. அக்காலகட்டத்தில் சந்திரிகாவின் அரசியல் நடவடிக்கைகளுக்கும் பிரபாகரனின் ஆயுதப் போராட்டத்திற்கும் முடிவுவரும் அளவிற்கு நிலைமை இருந்தது. சந்திரிகாவின் அரசியல் நடவடிக்கைகளுக்கு அச்சுறுத்தலாக ஜே.வி.பியினரின் வன்முறைகள் அமைந்தன. இந்திய அமைதிப்படையின் நடவடிக்கைகள் பிரபாகரனின் ஆயுதப் போராட்டத்திற்கு அச்சுறுத்தலாக அமைந்தன. இந்த இரு அச்சுறுத்தல்களும் அப்போது ஜனாதிபதியாகப் பதவிவகித்த பிரேமதாசாவால் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டன. ஜே.வி.பியினரின் வன்முறை நடவடிக்கைகள் ஜனாதிபதி பிரேமதாசாவால் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னரே சந்திரிகாவால் நாடு திரும்ப முடிந்தது. பிரேமதாசாவால் இந்திய அமைதிப்படை வெளியேற்றப்பட்ட பின்னரே பிரபாகரன் 2ஆவது ஈழப் போரை ஆரம்பித்தார். ஆனால், சந்திரிகா நாடு திரும்பி அரசியல் நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பித்ததும், பிரபாகரன் 2ஆவது ஈழப்போரை ஆரம்பித்ததும் தங்களுக்கு அச்சுறுத்தலாக இருந்த தடைகளை நீக்கிய பிரேமதாசாவுக்கு எதிராகவேயாகும்.

இவ்வேளையில், மற்றுமொரு புதுமையான சம்பவம் இடம்பெற்றுள்ளது. அதாவது சந்திரிகா நோர்வேயின் தலைநகரில் நடைபெற்ற சமாதான மகாநாட்டிற்குச் சென்று ஸ்ரீலங்காவின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சிகளில் இந்தியாவின் தலையீடுகள் தோல்வியில் முடிந்ததை ஏற்றுக்கொண்டார். அதேவேளை, தனது ஆயுதப் போராட்டத்திற்கு அதுவரை ஒத்துழைப்பை வழங்கிய இந்தியாவைக் கைவிட்டு நோர்வே உட்பட்ட ஐரோப்பிய நாடுகளுடனான தனது தொடர்புகளை வலுவாக்கும் முயற்சிகளில் பிரபாகரன் ஈடுபட ஆரம்பித்தார்.

1991 - 1994 காலப்பகுதி சந்திரிகா ஸ்ரீலங்காவின் தலைமைப் பதவியை ஏற்பதற்கான பின்னணிகளை உருவாக்கிய காலமாகவும், பிரபாகரன் உலகில் ஆற்றல்மிகு ஆயுதப் போராட்ட அமைப்பின் தலைவராவதற்கான பின்னணிகள் உருவான காலமாகவும் அமைந்தது. சந்திரிகாவின் மக்கள் கட்சி மீண்டும் அரசியலில் ஈடுபட்டு ஸ்ரீ.ல.சு.கட்சியுடன் ஒன்றிணைந்தது இந்தக் காலகட்டத்திலேயாகும். பிரபாகரன் இந்தியப் பிரதமரான ராஜீவ் காந்தியையும், ஸ்ரீலங்காவின் அப்போதைய பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னாவையும் படுகொலை செய்து, உலகில் ஆற்றல்மிக்க ஓர் ஆயுதக் குழுவின் தலைவரானதும் இந்தக் காலகட்டத்திலே ஆகும். இந்தக் காலகட்டத்தில் பிரபாகரனின் அனைத்துச் செயற்பாடுகளும் அப்போதைய ஐ.தே.கட்சி அரசுக்கு மிகப் பாதகமாக அமைந்ததுடன், அப்போதைய எதிர்க்கட்சி, ஆற்றல்பெறும் விதத்தில் பின்னணியாகவும் அமைந்தது. இதன்மூலம் சந்திரிகாவுக்கு தலைமைத்துவம் கிடைத்தது. சந்திரிகாவுக்கு அரசியல் தலைமை கிடைக்கச் செய்வது பிரபாகரனின் நோக்கமாக அமையாவிடினும் அவரை அறியாமலேயே அது இடம்பெற்றுவிட்டது.

ரஞ்சன் விஜேரத்னாவின் படுகொலை காரணமாக ஐ.தே.கட்சியில் ஐக்கியம் குலைந்தது; கட்சி செயல்ளரை இழந்தது. கட்சி இரண்டாகப் பிரிந்து ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு எதிராகக் குற்ற விசாரணைப் பிரேரணை கொண்டுவருவதற்கான பின்னணிகள் உருவாகின. இதன்மூலம் பயனடைந்தவர்கள் சந்திரிகாவும், ஸ்ரீ ல.சு.கட்சியினருமே ஆவர். லலித் அத்துலத் முதலியின் படுகொலையைத் தொடர்ந்து மேல் மாகாணத்திற்கான தேர்தலில் முதலமைச்சர் பதவிக்கு வேட்பாளராகப் போட்டியிடும் வாய்ப்பு சந்திரிகாவுக்குக் கிடைத்தது. ஜனாதிபதி பிரேமதாசாவின் படுகொலை காரணமாக மேல்மாகாண சபைத் தேர்தலில் சந்திரிகா வெற்றிபெற முடிந்தது.

ஐ.தே.கட்சி தலைமையை இழந்ததுடன் பொதுத்தேர்தலில் சந்திரிகா பிரதமராகும் வாய்ப்புகளும் உருவாகின. காமினி திசாநாயக்காவின் படுகொலை காரணமாக 63 சதவீத வாக்குகளைப் பெற்று சந்திரிகா ஜனாதிபதியாக முடிந்தது.

இந்தக் காலகட்டத்தில் சந்திரிகாவின் அரசியல் நடவடிக்கைகளால் பயனடைந்தவர் பிரபாகரனே. அன்று சந்திரிகா அறிந்துகொண்டே மேற்கொண்ட நடவடிக்கைகள் அல்ல அவை. இருப்பினும் சந்திரிகாவுக்குத் தெரியாமலேயே தானாகவே அந்தப் பயன்கள் பிரபாகரனுக்குக் கிட்டின.

ரஞ்சன் விஜேரத்னாவின் படுகொலை, லலித் அத்துலத் முதலியின் படுகொலை ஆகியன உட்பட பல படுகொலைகளுக்கான பொறுப்பு சந்திரிகாவின் அரசியல் பிரசாரங்களின் போது பிரேமதாசா மீது சுமத்தப்பட்டது. அதேபோல பிரேமதாசாவின் படுகொலைக்கான பொறுப்பு பிரேமதாசா மீதே சுமத்தப்பட்டது. சந்திரிகாவின் இத்தகைய நடவடிக்கைகளால் பிரபாகரன் பல வழிகளில் பயனடைந்தார். இந்தப் படுகொலைகள் எவற்றுடனும் பிரபாகரன் தொடர்பு படுத்தப்படவில்லை. பிரபாகரனின் விடுதலைப் புலிகள் அமைப்பைவிட ஐ.தே.கட்சி மிகவும் கொடியது, பயங்கரமானது என்ற எண்ணத்தை நாட்டிலும் வெளி உலகிலும் உருவாக்கமுடிந்தது.

1994-1995 காலப்பகுதியில் இந்த இருவரும் சமாதானமாக தத்தமது செயற்பாடுகளுக்குப் பாதுகாப்புத் தேடும் முயற்சிகளில் ஈடுபட்டனர். 1995 இல் இந்த முயற்சிகள் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து இருவரும் தத்தமது நிலைமைகளை யுத்தத்தின் மூலம் பாதுகாக்க முற்பட்டனர்.தான் பாதுகாக்கப்படவேண்டுமாயின் பிரபாகரன் அழிக்கப்பட வேண்டும் என சந்திரிகா நினைத்தார். இதையே பிரபாகரன் எதிர்மாறாக எண்ணினார்.

யாழ்ப்பாணத்தை வென்றெடுத்தது பிரபாகரனைத் தோற்கடித்ததாகும். பிரபாகரன் சந்திரிகாவால் வன்னியில் முடக்கப்பட்டபோது பிரபாகரன் யுத்தத்தைக் கொழும்புக்குக் கொண்டு சென்றார். எனவே, இவற்றின் மூலம் இருவருமே யுத்தத்தில் தோல்வி கண்டுள்ளனர் எனலாம். பிரபாகரன் யாழ்ப்பாணத்தை இழந்தபோது சந்திரிகா அரசு பொதுமக்களின் நன்மதிப்பை இழந்தது. நாளுக்கு நாள் சந்திரிகாவின் அரசு நன்மதிப்பை இழந்துகொண்டே போனது. சந்திரிகா ஆட்சி அதிகாரத்தின் மூலமும், பிரபாகரன் ஆயுத சக்தியின் மூலமும் தத்தமது தலைமைப் பதவிகளை பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட நேர்ந்தது.

1999 ஜனாதிபதித் தேர்தல்வேளை சந்திரிகாவின் அரசியலுக்கும், பிரபாகரனின் யுத்தத்திற்கும் ஒரு தீர்க்கமான கட்டமாக அமைந்தது. சந்திரிகாவைப் படுகொலைசெய்ய பிரபாகரன் மேற்கொண்ட முயற்சியால் லாபமடைந்தவர் சந்திரிகாவே ஆவார். அந்தச் சம்பவமானது சந்திரிகாவின் தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பிராணவாயுவாக அமைந்தது. ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா தோல்வியடையக் கூடும் என்ற கதைகளை படுகொலை முயற்சியானது தலைகீழாக மாற்றியது. முடிவில் சந்திரிகா வெற்றிபெற்றார். சந்திரிகாவின் இந்த வெற்றியை, "அனுதாப அலையால் கிடைத்த வெற்றி இது; இதற்காக பிரபாகரனுக்குப் புண்ணியம் கிடைக்கும்" என ஜே.வி.பியினர் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும், அன்றில் இருந்து விடுதலைப் புலிகளுக்கு எதிரான மக்கள் உணர்வை அதாவது பிரபாகரனுக்கு எதிரான உணர்வை, சந்திரிகா தனது தலைமைத்துவத்தையும், தனது அரசையும் பாதுகாப்பதற்காகப் பயன்படுத்தினார். பிரபாகரனின் புண்ணியத்தால் அரசை ஓட்ட முடிந்தது. 2000ஆண்டு பொதுத் தேர்தலின்போதும் பிரபாகரனுக்கு எதிரான போக்கைக் கடைப்பிடித்தே - அத்தகைய பிரசாரத்தை மேற்கொண்டே சந்திரிகா வெற்றிபெற்றார். பிரபாகரனை அழித்து, தனது அரசை மக்களுக்கு பிடித்த அரசாக்க சந்திரிகா எடுத்த முயற்சிகளால் பயனடைந்தவர் பிரபாகரனே. பிரபாகரனை அழிக்க சந்திரிகா தொடுத்த யுத்தத்திற்குப் பதிலடி கொடுக்கும் வகை



யில் பிரபாகரன் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற எடுத்த முயற்சிகளும், கட்டுநாயக்கா விமானப் படைமுகாம் மற்றும் விமான நிலையம் மீது மேற்கொண்ட தாக்குதல்களும் அவர் மீண்டும் ஆற்றல் பெற வாய்ப்புக்களாக அமைந்தன.

2001 செப்ரெம்பர் மாதம் சந்திரிகாவுக்கும் பிரபாகரனுக்கும் ஒரு கெடு காலமாக அமைந்தது. அமெரிக்காவில் உலக வர்த்தக மையத்தின் மீது பயங்கரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலை அடுத்து விடுதலைப் புலிகள் அமைப்பு உட்பட ஏனைய அமைப்புகளுக்கு எதிராக உலகத்தின் கருத்து உருவானது. அது சந்திரிகாவுக்கு ஆதரவான நிலைமை எனப் பலர் தெரிவித்தனர். ஆனால், நடந்தவையோ வேறு. 2001 செப்ரெம்பரில் சந்திரிகாவின் அரசைச் சேர்ந்த மூத்த தலைவர்கள் சிலர் அவரை விட்டுப் பிரிந்தனர்; அவரது கட்சி இரண்டாகப் பிளந்தது; அரசு ஆட்டம் கண்டது. சந்திரிகா இருக்கும்வரை தங்கள் ஆட்சியை வீழ்த்த முடியாது என நினைத்தவர்களின் கனவு கலைந்தது; அரசு கலைக்கப்பட்டது.

**தமிழில்: கஜனி**

இன்று பிரபாகரன் ஐ.தே.கட்சியின் சமாதான முயற்சிகளால் சுற்றிவளைக்கப்பட்டுள்ளார். சந்திரிகா ஐ.தே.கட்சியின் அரசால் ஓரங்கட்டப்பட்டு வருகிறார். இருவரும் சிற கொடிந்த பறவையின் நிலையில் உள்ளனர். இருப்பினும், வடக்கு - கிழக்கின் உத்தியோகப் பற்றற்ற தலைவனாக இன்றும் பிரபாகரனே விளங்குகின்றார். அதேபோலவே சந்திரிகாவும் தொடர்ந்தும் நாட்டின் தலைவியாக விளங்குகிறார். இந்த இருவரும் தொடர்ந்தும் ஐ.தே.கட்சிக்குத் தடைக்கல்லாகவே விளங்குகின்றனர். இந்தத் தடைக்கற்களை ஐ.தே.கட்சியால் அகற்றமுடியாது. முடிந்தாலும் அது மிகவும் கடினமான பணியாகவே அமையும். பிரபாகரனுடன் அரசு புரிந்துணர்வு உடன்பாட்டை மேற்கொண்டதுபோல சந்திரிகாவுடனும் அரசு புரிந்துணர்வு உடன்பாட்டை மேற்கொள்ளவுள்ளது. என அண்மையில் வதந்திகள் பரவின. பிரபாகரனுடன் சமாதானத்தை மேற்கொள்வது சுலபமானது என்பதையும் சந்திரிகாவுடன் அதை மேற்கொள்வது கடினமானது என்பதையும் இன்று அரசு உணர்ந்துள்ளது.

பிரபாகரனால் உருவாக்கப்படும் தடைகளைப் போல சந்திரிகாவால் உருவாக்கப்படும் தடைகளையும் போக்குவது கடினம் என இக்காரணத்தாலேயே கூறினோம். காரணம் ஐ.தே.கட்சியை அழிப்பதற்கு அக்கட்சியின் வரலாற்றால் உருவாக்கப்பட்ட இந்த இரு பாத்திரங்களின் எதிர்காலத்தையும் தீர்மானிக்கப் போவதும் அதே ஐ.தே.கட்சியே ஆகும். ★

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

64தொடர் இலக்கமுடைய 'மொறிஸ் ஒக்ஸ்போட்' கார் (டீசல்) சகல ஆவணங்களுடனும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.A.பாலசிங்கம், காம்ப் றோட், ஊர்காவற்றுறை.(8173)

பாவித்த, நல்ல நிலையில் உள்ள றலி இன துவிச்சக்கர வண்டி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.59, அத்தியடி, பொதுவீதி, யாழ்ப்பாணம். (8160)

Gampura, Raniket, CRD தரமான மருந்துகள் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை 8.00 மணிக்குப் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (8149)

Sony Model 2020, Sony 2060 கலர் தொலைக்காட்சிப் பெட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.சுதர்சன், 150, சிவன்பண்ணை வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்.(8164)

நல்ல நிலையிலுள்ள CD - 50 (Indicator Model) விற்பனைக்குண்டு. தொடர்பு:- ரவி(மெக்கானிக்), கொக்குவில் மேற்கு. (8192)

LG வகையைச் சேர்ந்த 21" தொலைக்காட்சிப் பெட்டி, Double Door குளிர்சாதனப் பெட்டி என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 958/39, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (8196)

## வீடு விற்பனைக்கு

கச்சேரி, நல்லூர் வீதியில் மூன்று பரப்புக் காணியில் அமைந்துள்ள புதுவீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: எஸ்.ஏ.தர்மலிங்கம், 344, கண்டி வீதி, புங்கன்குளம் சந்தி, யாழ்ப்பாணம். (8194)

## வகுப்புக்கள்

சுலபமாக ஆங்கிலத்தில் கதைக்கப் பயில. வேலை பார்ப்போருக்கு தனிப்பிரிவு. தொடர்பு: ஆசிரியர் ந.விகனேஸ்வரன் ஆச்சாரி, 426(302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (8167)

## தேவை

பாவித்த நல்ல நிலையிலுள்ள நாய்க்கூடு தேவை. தொடர்பு: கி.கங்காதரன், இல.06, பஸ்நிலையம் முன்பாக, யாழ்ப்பாணம். (8169)

## மணமகள் தேவை

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பணிபுரியும் மணமகன்களுக்கு படித்த, அழகிய மணப்பெண்கள் தேவை. 28 வயதுக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். தொடர்பு: N. கந்தையா, சோமசுந்தரம் வீதி, ஆனைகோட்டை. (8124)

யாழ்.இந்து நற்குடும்பத்தைச் சேர்ந்த, ஜாதகக் குற்றமற்ற, 30வயது விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியருக்கு ஜாதகக் குற்றமற்ற, 26 வயதுக்குட்பட்ட அழகிய பட்டதாரி மணமகள் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல.1635 C/o உதயன், யாழ்ப்பாணம். (8174)

## சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் சிறக்குமா? விவாகம் நடைபெறுமா? வெளிநாடு போகலாமா? நோய் நீங்குமா? மற்றும் எதுவாயினும் ஜாதகம், கைரேகை, எண்சோதிடப்படி கேட்டுப்பாருங்கள்! தொடர்பு: டாக்டர் த.சிவானந்தன் (பிரபல சோதிடர்), 264, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (8137)

## தவறிவிட்டது

நீர்வேலி தெற்கு, நீர்வேலியைச் சேர்ந்த அருளம்பலம் சண்முகநாதன் என்பவரது தேசிய அ.அட்டை (இல. 510551834V), சாரதி அனுமதிப் பத்திரம்(DL274713) என்பன யாழ்.பஸ் நிலையத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் PTR ரேடர்ஸ், 213, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (8191)



உ

இந்தியாவில் இருந்து வருகை தந்திருக்கும்

**நாதஸ்வர தவில் வித்துவான்களின்**

**நாதஸ்வர தவில் கச்சேரியும், பாராட்டு வைபவமும்**

இடம்: **இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கல்யாண மண்டபம்**
நாள்: 12.09.2002 வியாழக்கிழமை
நேரம்: மாலை 5.00 மணி

☆ நாதஸ்வர இசைமாணி கோகிலகான இளவல் சின்னமனூர் M.A.கீர்த்திகேயன (நாதஸ்வரம்)
☆ நாதஸ்வர இளந்தென்றல் நல்லிசை வேந்தன் இடும்பாவனம் E.V.இளையராஜா (நாதஸ்வரம்)
☆ தவில் இசைமானி இசைமாமுரசு மலைக்கோட்டை A.அசோக்குமார் (தவில்)
☆ தவில் நாத நந்தி கற்பனை சுடர்ஒளி ஸ்ரீ ரங்கம் V.G.முருகன (தவில்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- இணுவில் மக்கள்.

விளம்பர அன்பளிப்பு:
அருள் கல்வி நிலையம்
இணுவில்.
பிள்ளையார் பழக்கடை
கே.கே.எஸ். வீதி, கோண்டாவில்.
(8202)



**CHAMBER OF COMMERCE AND INDUSTRIES OF YARLPANAM AND BOSCH DEPT. OF DIESEL AND MOTOR ENGINEERING COMPANY LTD. OF COLOMBO,**
JOINTLY CONDUCTING A WORK SHOP ON

## "HOW TO USE POWER TOOLS"

*Day:* 12th September 2002
*Time:* 9.30 a.m. - 12.30p.m.
*Place:* **Dept. of Industries, Carpentry Work Shop Near Water Tank, Main Street, Jaffna.**

Carpenters, Electricians, Plumbers, Steel Fabricators and Unemployed youths are requested to attend the work shop.

(8183) **Executive committee of CCIY.**



# நீங்காத நினைவலைகள்

| முதலாம் ஆண்டு நினைவு நாள் | 17ஆம் ஆண்டு நினைவு நாள் |
|---|---|
|  |  |
| **செல்லக்கிளி ஜெகதாஸ்** | **செல்லக்கிளி யசோராணி** |

தோற்றம்
1965.04.07 ⟷ 1960.09.17
மறைவு
23.08.2001 ⟷ 1985.06.22

*திதி: 12.09.2002*

சோதனையின் விளிம்பிலே சகோதரர்கள் நீர் சென்ற
பாதையினை வேல்தனைப் பாய்ச்சிய வேதனையில்
எம் விழிகள் நோக்கி நிற்க
ஐயிரண்டு மாதங்கள் சுமந்து பெற்றவள் தனியே நின்று தவிக்க

ஊர் போற்ற உமை வளர்த்த தந்தை மனம்
வெந்து நோக உடன் பிறந்த சகோதரர்கள்
ஓலமிட்டு அழுதிட அன்பு காட்டி உபசரிக்கும் மனைவியவள்
மனம் கொதிக்க பாசத்துடன் நீ வளர்த்த
பிள்ளை மனம் பரிதவிக்க

எம்மைக் கவலையில் ஆழ்த்திவிட்டு ஆறாத
கண்ணீரில் மிதக்கவிட்டு காலனவன் உங்களைக்
கவர்ந்து சென்றதேனோ?

*உங்கள் ஆத்மசாந்திக்காக இறைவனை வேண்டுகிறோம்.*

*மடத்தடி, ஊரிக்காடு, வல்வெட்டித்துறை.* (8159)
தாய், தந்தை, மனைவி, மருமக்கள், பிள்ளைகள், சகோதரர்கள், உற்றார், உறவினர்கள்.


# சிமெந்துக் கூட்டுத்தாபனத்தின் இறந்த ஊழியருக்கு காப்புறுதி

யாழ்ப்பாணம், செப்.12

காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்றி இயற்கை மரணமடைந்த ஊழியர்களுக்கான காப்புறுதிப் பணத்தை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் பணியாற்றிய காலத்தில் சிமெந்துக் கூட்டுத்தாபனத்தினால் அவர்களின் பெயர்களில் எடுக்கப்பட்ட காப்புறுதிகளுக்கான தொகை, காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் கட்டப்பட்டு வந்தன.

அத்தகைய பணியாளர்களில் தற போது இறந்துவிட்ட 10 பேருக்குக் காப்புறுதித் தொகையாக தலா ஒரு லட்சம் ரூபா வீதம் வழங்கப்படவிருக கின்றது.

"தனிநபர் விபத்து அனுகூல காப்புறுதித் திட்டத்தின்கீழ் பின்வருவோருக்கான காப்புறுதிக் கொடுப்பனவுகள் கொடுக்கப்படவுள்ளன.

எஸ்.நடராஜா(கல்லாரை - மல்லாகம்), எஸ்.குருநாதபிள்ளை (சந்தை வீதி - காங்கேசன்துறை), கே.சோமசுந்தரம்(மல்லாகம்), எம்.தாமோதரம்பிள்ளை(வங்கி வீதி, ஆவரங்கால், புத்தூர்), கே.ராஜரட்ணம் (தொல்புரம் மேற்கு, சுழிபுரம்), ரி.ஜோன் (சென்.ஜேம்ஸ் வீதி, பலாலி தெற்கு, வசாவிளான்), பி.இராசையா (வட்டுக்கோட்டை கிழக்கு, சித்தன்கேணி), எஸ்.நடேசன்(கலட்டி, தெல்லிப்பழை), எம்.ஏ.எட்வேட்(சில்லாலை மேற்கு, பண்டத்தரிப்பு) ஆகியோரே அவர்களாவர். இவர்களின் உறவினர்கள் அல்லது பின் உரித்துடையவர்கள் காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனத்துடனோ அல்லது யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தின் முதலாம் மாடியில் இயங்கி வரும் இலங்கை காப்புறுதிக் கூட்டுதாபன யாழ்.அலுவலகத்துடனோ தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை - 2000ஆம் ஆண்டு தென்மராட்சியில் யுத்தத்தினால் கடைகள், வீடுகள் மற்றும் சொத்துக்களுக்கு ஏற்பட்ட இழப்புகள் மற்றும் அழிவுகளுக்கு - ஏற்கனவே காப்புறுதி செய்திருப்பவர்களுக்கு அவற்றுக்கான நஷ்டஈட்டுத் தொகைகளை வழங்குவதற்கும் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது. இவற்றுடன் சம்பந்தப்பட்டவர்களை உடன் தொடர்பு கொண்டு நஷ்டஈட்டுத் தொகைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஓ-4)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கலைப்பணியில் தன்னை அர்ப்பணித்த பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகச் செயலாளர்

**கலைஞர் செல்லையா மெற்றாஸ்மயில்**

அவர்களை 2002 செப்ரெம்பர் 7ஆம் திகதி 'மரபுக் கலைஞானி' என்ற பட்டம் வழங்கி கௌரவித்தமையை மனமார மகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*குருநகர், யாழ்ப்பாணம்.* (8200)
அ.மனோகரன் அண்ணாவியார் குடும்பத்தினர்.



உ

## ஏழாலை களபாவோடை அருள்மிகு ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்

*அம்பிகை அடியார்களே!*

**எதிர்வரும் (14.09.2002) சனிக்கிழமை**
காலை 9.00 மணிக்கு 108 சங்காபிஷேகம் நடைபெறும்.
ஏகதின இலட்சார்ச்சனை (15.09.2002) ஞாயிற்றுக்கிழமை
காலை 8.00 மணிமுதல் நடைபெறும். இந்த இரு தினங்களும்
பகல் உற்சவம், மாகேஸ்வர பூஜை உண்டு.
மேற்படி விழாக்கள் சர்வபோதகர்
**சிவஸ்ரீ தா.மகாதேவக் குருக்கள்** தலைமையில் நடைபெறும்.
ஆலய பிரதம குரு: **சிவஸ்ரீ தி.கெங்காதரக் குருக்கள்**

அடியார்கள் அம்பிகையைத் தரிசித்து
அருள்பெறுமாறு அழைக்கின்றோம்.

(C/23773) - தேவஸ்தானத்தினர்.



## மரண அறிவித்தல்

**திருமதி சிவஞானம் இலட்சுமிப்பிள்ளை (பவளம்)**

கொக்குவில் மேற்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவஞானம் இலட்சுமிப்பிள்ளை அவர்கள் (10.09.2002) செவ்வாய்க்கிழமை பிற்பகல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவஞானத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தம்பு - சின்னம்மாவின் மகளும் காலஞ்சென்ற இராசம்மா மற்றும் இரத்தினம் (பூமணி) கணேசப்பிள்ளை (முன்னாள அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் சகோதரியும் மகேஸ்வரி, கனகராசா (இ.போ.ச.), சிவசோதி, கணேஸ்வரி, சிவராசா, தர்மராசா (LONDON) ஆகியோரின் அன்புத் தாயாரும் சந்திரரெத்தினம், செல்வராணி, ஜெகநாதன், சிதம்பரநாதன், சொர்ணகாந்தி, சாந்தி (LONDON) ஆகியோரின் அன்பு மாமியும் உஷாந்தினி, ஜெயரூபன், உசாந்தன், ஜெசாந்தினி, கயேந்தினி, துவாரகா, தர்சிகா, சதீஸ்குமார், சஞ்சய்குமார், இந்துஜா, சிமிதா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.09.2002) வியாழக்கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.*
தகவல்: பிள்ளைகள், மருமக்கள். (8195)



சாவகச்சேரியில்
**சொலெக்ஸ் & லக்ஷெஷ் பல்கட்டும் நிலையம்**
**மூக்குக் கண்ணாடியகம்** 232/A, பிரதான பிரதேச செயலகம் முன்பாக, கண்டி வீதி, சாவகச்சேரி. (C/23752)

# எதிரியின் இமாலய நம்பிக்கைகளை இலத்திரனியல் திறனினால் தகர்த்தவர்!

## கேணல் ராஜுவுக்கு புலிகள் பிரமுகர் புகழாரம்

தென்மராட்சி,செப்.12

எதிரியின் இமாலய நம்பிக்கைகளை உடைத்தெறியும் ஆற்றலுடன் தனது இலத்திரனியல் நடவடிக்கைகளை மேற்கொண்டு புலிகள் இயக்கத்தின் போர் வலுவை வளர்த்தவர் கேணல் ராஜு".

- இவ்வாறு புகழஞ்சலி செய்தார் புலிகளின் அரசியல் துறைப் பிரமுகர் பாப்பா.

நோயினால் சாவடைந்த புலிகளின் தளபதி கேணல் ராஜுவின் அஞ்சலி நிகழ்வு நேற்றுமுன்தினம் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்றபோது அங்கு அஞ்சலி உரையாற்றுகையிலேயே பாப்பா இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யுத்தமுனைகளில் பல போராளிகள் களப்பலியான போதும் கலங்காத எமது நெஞ்சங்கள் சமாதான காலத்தில் ஒரு தளபதியை இழந்து வாடுகின்றன. இந்த இழப்பு எமக்குப் பெரும் துயரத்தை ஏற்படுத்திவிட்டது. தமிழ்மண்ணின் மீட்புக்காகவும், தமிழ் மக்கள் நிம்மதியாகவும், சுதந்திரமாகவும் வாழவேண்டுமென்ற அபிலாஷையுடனும் போராடி எமக்கெல்லாம் பக்கபலமாக திகழ்ந்த கேணல் ராஜு சமாதானம் நெருங்கி வரும் வேளையில், சாவினை அணைத்துக்கொண்டமை பேரதிர்ச்சியாகும்.

உலகநாட்டு மக்கள் பெருமைப்படும் அளவுக்கு தலைவருடன் தோளோடு தோள் நின்று உழைத்த தளபதி இன்று எம் முன்னால் மீளாத் துயிலில் காணப்படுகிறார்.

தென்னாபிரிக்காவிலிருந்து 'பவள்' கவச வாகனத்தைக் கொண்டுவந்து எதிரி போர் முனையில் பயன்படுத்திய போது, எந்தத் தாக்குதலுக்கும் அது அசையாது எனக் கருதிய எதிரியின் நம்பிக்கையை - 'பவள்' கவச வாகனத்தை தகர்த்தெறிந்ததன்மூலம் - தவிடுபொடியாக்கிய பெருமை கேணல ராஜுவைச் சாரும்.

எமது தலைவரின் வழிநடத்தலில் மேற்கொள்ளப்படும் சுதந்திர வேட்கையை அழிக்க எவராலும் முடியாது. மூத்த உறுப்பினர்களான கேணல் கிட்டு, கேணல் சங்கர், கேணல் ராஜு" ஆகியோரின் விடுதலைப் போராட்டப் பங்களிப்பு எமக்குப் பெரும் உந்து சக்தியாகத் திகழும் என்று தெரிவித்தார். (ஒ-117)

## 8 மணிநேரச் சொற்பொழிவு



யாழ்ப்பாணம்,செப்.12

இந்து மறுமலர்ச்சி ஆதீன முதல்வரும், உடுப்பிட்டி வடக்கு, நெற்கொழு வைரவர் ஆலய பிரதமகுருவுமான அழகு ஜெகதீஸ்வர தேசிகர் தொடர்ச்சியாக 8 மணித்தியாலங்கள் சொற்பொழிவாற்றி சாதனை நிகழ்த்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு 7 மணிமுதல் மறுநாள் அதிகாலை 3 மணிவரை கம்பர்மலை பெரியதம்பிரான் ஆலயத்தில் 'மகாபாரதம்' என்ற பொருளில் அவர் தொடர் சொற்பொழிவாற்றி சாதனை படைத்துள்ளதாக மேற்படி ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த சாதனை நிகழ்வின்போது இந்துமத குருமார் ஒன்றியத்தின் தலைவர் ப.மனோகரக் குருக்கள், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் உட்பட நூற்றுக்கணக்கானவர்கள் சமுகமளித்திருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

# தெற்கில் உள்ளவைபோன்று குடாநாட்டு நீதிமன்றங்களுக்கும் விரைவில் நவீன கட்டடங்கள்

## நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலர் வாக்குறுதி

யாழ்ப்பாணம்,செப்.12

தெற்கிலுள்ள நீதிமன்றங்களின் கட்டடங்கள் போன்ற நவீன கட்டடங்களை குடாநாட்டு நீதிமன்றங்களுக்கும் உலக வங்கியின் உதவியுடன் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று நீதிச் சேவைகள் ஆணைக்குழுச் செயலாளர் பி.டபிள்யூ.டி.சி. ஜெயதிலகா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு மூன்றுநாள் விஜயம் மேற்கொண்டு வந்த அவர், யாழ்.மேல்நீதிமன்றம் மற்றும் யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, மல்லாகம், பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய நீதிமன்றங்களையும் அவை முன்னர் இயங்கிய - தற்போது சேதமடைந்துள்ள - கட்டடங்களையும் பார்வையிட்டார்.

நீதிமன்ற ஊழியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக நடவடிக்கைகளை எடுப்பதாக அவர் உறுதியளித்தார்.

மல்லாகம், பருத்தித்துறை, ஊர்காவற்றுறை, சாவகச்சேரி நீதிமன்றங்களுக்கு புதிய கட்டடங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் சொன்னார்.

மேன்முறையீட்டு நீதிமன்றம், மேல் நீதிமன்றம், இரு மாவட்ட நீதிமன்றங்கள், இரு நீதிவான் நீதிமன்றங்கள் ஆகியன கொண்ட நீதிமன்ற வளாகத்தை - முன்னர் யாழ்.நீதிமன்றம் இயங்கிய - யாழ்.மத்திய கல்லூரிக்கு அருகேயுள்ள பகுதியில் அமைக்க விரைவில் அடிக்கல் நடப்படும் என்றும் அவர் கூறினார். (ஒ-3)

### 19ஆவது திருத்தத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம்!

கொழும்பு,செப்.12

19ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டமூலத்தின் இறுதிவடிவுக்கு நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரமளிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பங்குபற்றவில்லை. (ஐ-3-12)

# அம்பாறையில் பொலிஸார் மோதல்; அத்தியட்சகர் உட்பட ஐந்து பேர் காயம்!

கொழும்பு,செப்.12

அம்பாறை நகரிலுள்ள பொலிஸ் அதிகாரிகளின் உத்தியோகபூர்வ இல்லத்தில் ஞாயிறன்று இரவு நிகழ்ந்த மோதல் ஒன்றில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.எதிரி விக்கிரமவும், பொலிஸ் அதிரடிப் படையணியின் நான்கு இன்ஸ்பெக்டர்களும் காயமடைந்திருக்கின்றனர்.

அதிரடிப்படையணியின் பொலஸ் அதிகாரிகளின் தாக்குதலில் தான் காயமடைந்ததாக பொலிஸ் அத்தியட்சகர் கூறுகிறார்.

சம்பவம் நடைபெற்ற அன்று பொலிஸ் அதிகாரிகளின் உத்தியோகபூர்வ இல்லத்துக்கு வந்திருந்த அதிரடிப்படை அதிகாரிகள் சிலர் குடிவெறியில் சத்தமிட்டனர் எனவும், அது தனது நித்திரையைக் குழப்பியதால் தான் அந்த இடத்துக்குச் சென்று, சத்தமிட வேண்டாம் என்று கூறியபொழுது அவர்கள் தன்னைத் தாக்கினர் எனவும் பொலிஸ் அத்தியட்சகர் கூறியிருக்கிறார்.

எவ்வாறாயினும், தனது நித்திரையைத் தாங்கள் குழப்பியதாகக் கூறி, பொலிஸ் அத்தியட்சகர் தம்மைத் தாக்கினார் என்று அதிரடிப் படை அதிகாரிகள் பொலஸில் தெரிவித்திருக்கின்றனர்.

மோதலில் காயமடைந்த அதிரடிப்படை அதிகாரிகள் நால்வர் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகின்றனர்.

பொலிஸ் அத்தியட்சகர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வெளியேறியிருக்கிறார்.

வைத்தியசாலையில் இருக்கும் அதிரடிப்படை அதிகாரிகள் அம்பாறை பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர். (ஐ)

### வாராந்த நிகழ்வு

சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறும் வாராந்த வெள்ளி நிகழ்வில் இவ்வார நிகழ்வாக பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் சிவஸ்ரீ தி.சோமாஸ்கந்தராசக் குருக்களின் "வேலுண்டு வினை தீர்க்க" எனும் பொருளில் சொற்பொழிவு இடம்பெறும். இந்நிகழ்வின் அறிமுகவுரையை லயன் கே.செல்வரெத்தினம் நிகழ்த்த உள்ளார். (ஒ)

# யாழ்.தொழில் திணைக்களத்தில் உத்தியோகத்தர் பற்றாக்குறை

## பணிகள் ஸ்தம்பிதமடையும் நிலை

யாழ்ப்பாணம்,செப்.12

தொழில் திணைக்களத்தின் யாழ். அலுவலகத்தில் தொழில் உத்தியோகத்தர்கள் இல்லாமையால் திணைக்களப் பணிகள் ஸ்தம்பிதமடையும் நிலையில் இருக்கின்றன.

தொழில் அதிகாரிகள் 10 பேர் பணிபுரிந்த தொழில் திணைக்களத்தில் கடந்த சில வருடங்களாக இருவர் மட்டுமே பணிபுரிந்து வந்தனர்.

இது தொடர்பாக தொழில் திணைக்கள தலைமையகத்துக்கும் தொழில் அமைச்சுக்கும் யாழ்.தொழில் திணைக்கள வட்டாரங்கள அறிவித்ததை அடுத்து இவ்வருட முற்பகுதியிலிருந்து மேலும் இரு தொழில் அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.

அந்த நால்வரில் இருவர் இவ்வருட இறுதியில் ஓய்வுபெற இருக்கினறனர். ஒருவர் சொந்த விடயம் காரணமாக வவுனியாவுக்குச் செல்லவுள்ளார். மற்றையவரும் தொழில் திணைக்களத்தின் உதவி ஆணையாளராகப் பதவி உயர்வுபெற்றுள்ளார். இதனால் தொழில் திணைக்களத்தின் யாழ்.அலுவலகப் பணிகள் ஸ்தம்பிதமடையும் நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயத்தில் குடாநாட்டிலுள்ள தொழிற்சங்கங்கள் மற்றும் தொழிலாளர் அமைப்புக்கள் மிகவும் அக்கறையுடன் செயற்பட்டு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அழுத்தம் கொடுத்து மேலும் தொழில் அதிகாரிகளை இங்கு நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தொழில் திணைக்களத்தின் யாழ். அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-4)

### சுதேச வைத்தியம் குறித்த கூட்டம்

யாழ்ப்பாணம்,செப்.12

பாரம்பரிய வைத்தியத்துறையைப் புனரமைப்பது தொடர்பாக பாரம்பரிய வைத்திய பாதுகாப்பு நிறுவனத்தின் ஏற்பாட்டில் பொதுக் கூட்டம் ஒன்று எதிர்வரும் 15 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அதேதினத்தில் நல்லூர் மாநகர சபை சித்த ஆயுர்வேத வைத்தியசாலையில் இலவச சிகிச்சை முகாம் நடைபெறும் -


எதிர்வரும் 16 ஆம் திகதி யாழ். பரியோவான் கல்லூரியில் சுதேச வைத்தியம் சம்பந்தமான விழிப்புணாவுக் கூட்டமும் இலைக்கஞ்சி வழங்குதலும் இடம்பெற உள்ளன. (ஒ-12)



யாழ்.மாவட்ட நீதிபதி இ.த.விக்னராசா தலைமையில் அவரது உத்தியோகபூர்வ அறையில் சமீபத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது.

அதில் பங்கேற்ற மல்லாகம் மாவட்ட நீதிபதி பா.சுப்பிரமணியம், பருத்தித்துறை மாவட்ட நீதிபதி அ.பிரேம்சங்கர், இரத்தினபுரி மேல் நீதிமன்ற நீதிபதி நளின் பெரேரா, நீதிச்சேவை ஆணைக் குழுச் செயலாளர் பீ.டபிள்யூ.டி.சி.ஜெயதிலகா, யாழ்ப்பாணம் மேல்நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ் வரதராசா, யாழ்ப்பாணம் மேலதிக மாவட்ட நீதிபதி திருமதி சரோஜினிதேவி இளங்கோவன், யாழ்.மாவட்ட நீதிபதி இ.த. விக்னராசா ஆகியோர் கலந்துரையாடுவதைப் படத்தில் காணலாம்.

# சாயிசிந்தனை



## இறைவன் கருணை

நமது தேகம் காந்த சக்தி நிறைந்த ஒரு கோயில் போன்றது. ஆகவே, அது புனிதச் செயல்களுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். நீங்கள் தீய குணங்களான பொறாமை, கோபம், வெறுப்பு ஆகியவற்றிற்கு இடம் கொடுத்தால் உங்கள் காந்தசக்தி வீணாகிவிடும். எந்த ஒரு விஞ்ஞானியாவது உடலில் உணவு எப்படி ஜீரணம் செய்யப்படுகிறது? இரத்த ஓட்டம் எப்படி நிகழ்கிறது? என்பதை விளக்கமுடியுமா? முடியாது.

ஒவ்வொரு மனிதனிடமும் இதயம் சில குறிப்பிட்ட அளவுக்குள் அடித்துக கொண்டிருக்கிறது. இதனை எந்த விஞ்ஞானி விளக்கமுடியும்? இதெல்லாம இறைவனால் ஏற்படுத்தப்பட்ட சட்டங்கள். மருத்துவர்கள் தங்கள் சாதனைகளுக்காக மிகவும் பெருமைப்படுகிறார்கள். ஆனால், அது ஏன் துடிககிறது? எப்படித் துடிக்கிறது? அதை இயக்குபவர் யார்? என்று அவர்களுக்குத் தெரியாது. இது எல்லாம் மனித முயற்சியால் நடப்பவை அல்ல. ஆனால், தெய்வீக சங்கல்பத்தினால்தான் தேகம் இயங்குகிறது. ஆனால், மனிதனால் இதனைப் புரிந்துகொள்ளமுடியவில்லை. காரணம் அவனது அகங்காரம். இவற்றைச் செய்தது தானே என்ற தவறான எண்ணம்தான் அதற்குக் காரணம்.

மனித முயற்சி தேவைதான். ஆனால், எதுவும் இறைவன் கருணையின்றி அடையமுடியாது. படைப்புக்கு பின் அனைத்தையும் கடந்த ஒரு சக்தி இருக்கிறது. அந்த சக்திதான் இறைவன். அவனின்றி மனிதனால் வாழமுடியாது.

ஆதாரம்: **சனாதனசாரதி.**

# இடநெருக்கடி காரணமாக நோய்களுக்கு ஆளாகும் நிலையில் களுத்துறைச் சிறைக் கைதிகள்

## கைதிகள் நலன்புரிச் சங்கம் அபாய அறிவிப்பு

கொழும்பு,செப்.12

சிறைச்சாலை இடநெருக்கடி காரணமாகப் பல்வேறு நோய்களுக்கு உள்ளாகும்நிலையில் நீர்கொழும்பு சிறைக் கைதிகள் உள்ளனர்.

நானூறு கைதிகளை மட்டுமே வைத்திருக்கக் கூடிய நீர்கொழும்பு சிறைச்சாலையில் ஆயிரத்து நானூறு கைதிகளை அடைத்து வைத்துள்ளமை அடிப்படை மனித உரிமைகளை மீறும் செயல் என சிறைக் கைதிகள் நலன்புரிச் சங்கம் தெரிவித்துள்ளது.

செப்ரெம்பர் 12ஆம் திகதி சிறைக் கைதிகளின் நலன் பேணும் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போது இச்சங்கத்தின் தலைவர் உபாலி மதுரு பெரும மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது :-

ஒல்லாந்தர்களின் கோட்டையாகப் பாவிக்கப்பட்ட களுத்துறைச் சிறைக கட்டடத்தில் 400 கைதிகளை மட்டுமே தடுத்து வைக்கமுடியும். மிகவும பழைமை வாய்ந்த இக்கட்டடம் போதிய வசதிகள் அற்ற நிலையிலேயே உள்ளது.

பொது மலசலகூடங்கள் 14 மட்டுமே சகலருக்கும் பாவிக்கக் கூடியதாக உள்ளன. நான்கு கிணறுகளே குளிப்பதற்கும், குடிப்பதற்கும் பயன்படுத்த வேண்டிய நிலையில் உள்ளன. கைதிகளுக்குக் கிடைக்கும் உணவைக்கூட அமர்ந்து உண்பதற்கு இடமில்லாத சூழ்நிலை. கைதிகளுக்கு இருக்கக்கூடிய அடிப்படை வசதிகள கூட இல்லாத நிலையில் களுத்துறைச் சிறைக்கைதிகள் மிகவும் கஷ்டப்படுகின்றனர்.

மிருகங்களுக்கு உள்ள சுதந்திரம கூட, மனிதர்களுக்கு இல்லாமல் போனதையிட்டு மனித உரிமை சம்பந்தப்பட்ட அமைப்புகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அதிகமானவர்கள் வழக்குகள் எதுவும் இன்றி அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் வெளிநாடு செல்ல முற்பட்டபோது பிடிபட்டவர்களே அதிகம். எனவே இவர்களை விரைவில் விடுவிக்க வேண்டும் அல்லது விசாரணை மேற்கொள்ளவேண்டும். இப்படி அடைத்து வைப்பதால் இடநெருக்கடியால் பல்வேறு நோய்களுக்கு இலக்காகும் நிலை உருவாகும் - இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஐ)

## புலோப்பளை

### அறத்திக் கண்ணகா பரமேஸ்வரி அம்பாள் தேவஸ்தான

### பிராயச்சித்த அபிஷேகம்

மேற்படி தேவஸ்தான பிராயச்சித்த அபிஷேகம் சித்திரபானு வருடம் ஆவணி மாதம் 27ஆம் நாள் (12.09.2002) வியாழக் கிழமை காலை 8.24 மணிமுதல் 9.24 மணிவரையுள்ள துலா லக்கின சுபமுகூர்த்தத்தில் நடைபெறும். அம்பாள் அடியார் களைக் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

(C/23778) - ஆலய தர்மகர்த்தா .



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி மகேஸ்வரி பொன்னுத்துரை

திதி: ஷஷ்டி 12.09.2002

பிறப்பு 10-11-1938 — இறப்பு 24-08-2001

*உங்கள் நலம் பேணாது எங்களை அரவணைத்த*
*அன்பின் தாயே! இன்று ஓராண்டு கழிந்ததுவோ*
*உங்கள் பாசத்திற்காகத் தவிக்கிறோம்*
*உங்களுக்கு நிகர் யார் எமக்கு?*
*உங்கள் அன்புக்காக ஏங்கித் தவிக்கும்...*

*80, யாழ். வீதி, யாழ்ப்பாணம்.* (8213)
கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.



## 7ஆம் ஆண்டு நினைவலைகள்



அன்னை மடியில் 12 - 06 - 1979

ஆண்டவன் நிழலில் 12 - 09 - 1995

### செல்வன் சிறீஸ்கந்தராசா றமேஷ்குமார்

(தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவன்)

*ஏழாண்டுகள் சென்றாலும் இன்னும் ஈரவிழிகள் காயவில்லை*
*என்றும் மறவாத உந்தன் நினைவலைகள்*
*மீண்டு நீ எம்முன் தோன்றிடும் வரையும்*
*ஆண்டவன் நிழலில் அமைதி கொள்க!*

*ஏழாலை கிழக்கு, ஏழாலை.*
உன் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள், நண்பர்கள். (8203)



## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர்
திரு. சபா குகதாசன்
அவர்களின் பாசமிகு தந்தையார்

### கதிரவேலு சபாபதி

*(ஓய்வு பெற்ற ஆசிரியர்)*

அவர்களின் மறைவையிட்டு கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி.* (C/23777)
ஆசிரியர் கழகம்.


## வதந்தியால் பொலிஸ் குவிப்பு

பொன்னாலைச் சந்தியில் நேற்று புதன்கிழமை அதிகாலை முதல் பெருந்தொகையான பொலிஸார் கண்ணீர்ப் புகைக்குண்டுகள், குண்டாந் தடிகளுடன் குவிக்கப்பட்டிருந்தனர்.

பொதுமக்களால் மறியற்போராட்டம் ஒன்று நேற்று நடத்தப்படவுள்ளதாக வதந்தி கிளம்பியதையடுத்தே இவ்வாறு பெருமளவு பொலிஸார் குவிக்கப்பட்டிருந்ததாகத் தெரியவருகின்றது. (ஓ-73)

## விசர்நாய்க் கடிக்கு 4பேர் இலக்காகினர்

காரைநகர் நெடுங்காட்டுப் பகுதியில் ஒரே நாளில் நால்வரை விசர்நாய் ஒன்று கடித்துக் குதறியுள்ளது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் வேலாயுதம் கனகாம்பிகை (வயது 44), அன்னராசா பூகோலம் (வயது 66), அன்னராசா சத்தியேந்திரன் (வயது 27), எஸ்.ஜெயகௌரி (வயது 30) ஆகியோரே விசர்நாய்க் கடிக்கு இலக்கானவர்களாவர். விசர்நாய்க் கடிக்கு இலக்கான இவர்கள் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.(ஓ-73)

## பொலிஸார் தாக்கியதாக முறைப்பாடு

யாழ்ப்பாணம்,செப்.12

யாழ்ப்பாணம் நவீன சந்தைப் பகுதியில் வைத்து வர்த்தகர் ஒருவர் பொலிஸாரால் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக யாழ்மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 3 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பிற்பகல் இடம்பெற்றதாகக் கூறப்படும் இச்சம்பவத்தில் இராசரத்தினம் சர்வேஸ்வரன் என்பவரே இத்தாக்குதலுக்கு உள்ளானதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவர் தனது முறைப்பாட்டில் தனக்கும் இன்னொரு வர்த்தகருக்கும் இடையில் வாக்குவாதம் இடம்பெற்றதாகவும் -

இது தொடர்பாக அந்நபர் பொலிஸாரிடம் முறையிட்டதைத் தொடர்ந்து அவ்விடத்திற்கு வந்த இரண்டு பொலிஸார் எவ்வித விசாரணையும் இன்றித் தன்னைத் தாக்கியதாகவும் - தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட பொலிஸார் மீது அடுத்தவாரம் விசாரணைகளை நடத்தவுள்ளதாக மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்அலுவலக இணைப்பாளர் ஆர்.பி சந்திரசேகர தெரிவித்துள்ளார். (ஒ-ரி)

## இந்தியாவில் தடையை நீக்க கோரிக்கை

இந்தியாவில் புலிகள் அமைப்பின் மீது விதிக்கப்பட்டிருக்கும் தடையை நீக்கவேண்டும் என்று உலகத்தமிழ் சம்மேளனத் தலைவர் டி.ஆர்.ஜனார்த்தனன் கோரிக்கை விடுத்துள்ளார்.

புலிகள் மீதான தடையை இலங்கை அரசு நீக்கியதை அடுத்து புலிகள் அமைப்பைத் தடைசெய்துள்ள இந்தியா உட்பட ஏனைய நாடுகள் அந்தத்தடையை நீக்க வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

லண்டனில் நடைபெற்ற உலகத் தமிழ் சம்மேளனத்தின் 40 ஆவது ஆண்டு விழாவில் பேசுகையிலேயே அவர் இக்கோரிக்கையை விடுத்தார்.


## தேவை

எமது நிறுவனத்தில் வேலை பழகியவர்களும், பழக விரும்புபவர்களும் தேவை (பெண்கள்).
15-09-2002 ஞாயிற்றுக்கிழமை நேரில் வரவும்.

ஸ்ரீமாருதி ஸ்ரார் இனிப்புத் தொழிலகம்
சுரேஸ் இண்டஸ்றீஸ்
*8/12 விநாயகர் வீதி, சுண்டுக்குளி.* (8199)



## தேவை

**எம். இராஜநாயகம் அன் கம்பனி பட்டயக்கணக்காளர்கள்**

எமது நிறுவனத்துக்கு பல பதவி நிலைகளில் பணியாளர்கள் தேவை.

1. கணக்காளர்
2. உதவிக் கணக்காளர்
3. கணக்கியல் பயிலுநர்
4. பகுதிநேரக் கணக்காளர்

தொடர்பு:
இல. 140, பலாலி வீதி
(பரமேஸ்வராச் சந்தி),
யாழ்ப்பாணம்.
T.P: 021-2478 (8193)


## ஊழியர் பற்றாக்குறை குறித்து பலமுறை முறையிட்டும் பயனில்லை

### என்கிறார் யாழ். சிறை அதிகாரி

யாழ்ப்பாணம்,செப்.12

யாழ்.சிறையில் சிறைக்காவலர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு தொடர்ந்தும் பற்றாக்குறை நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பாக சிறைச்சாலை அதிகாரி ஒருவர் தெரிவித்ததாவது:-

'தற்போது 33 சிறை உத்தியோகத்தர்களுக்கு வெற்றிடங்கள் உள்ளன. அத்துடன் தற்போது இருக்கும் சிறைக்காவலர்களில் பெரும்பாலானவர்களுக்கு தமிழ்மொழி தெரியாது. இதனால் அவர்கள் இங்கு தமது கடமைகளை திருப்திகரமாகச் செய்ய முடியாதநிலை உள்ளது.

இதனால் சேவையில் இருக்கும் ஒரு சில தமிழ் உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகமாக இருக்கின்றது. இது குறித்து மேலிடத்துக்கு பல தடவைகள் அறிவித்த போதிலும் எதுவித பயனும் கிட்டவில்லை.

அத்துடன் சிறைச்சாலைக்கு போதிய வாகன வசதிகளும் இன்னமும் வழங்கப்படவில்லை -

என்று தெரிவித்தார்.

(ஓ-4)

## நாடகப் பயிற்சிப் பட்டறை

வலி.வடக்கு,செப்.12

தென்னிலங்கைப் பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த நாடகக் குழுவினரால் நாடகப் பயிற்சிப் பட்டறை நாளையும், 15ஆம் திகதியும் பிற்பகல் 1.00 மணிக்கு யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏயில் நடத்தப்படவுள்ளது.

14ஆம் திகதி மேடை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. இந்த நிகழ்வில் ஆர்வலர்கள் கலந்துகொள்ள முடியும். (ஓ-86)


## நன்றி பகர்தல்

திருநெல்வேலி சந்தைக்கு அண்மையில் தவறவிடப்பட்ட பணப்பையைக் கண்டெடுத்து உரியவரிடம் தேடிக் கையளித்த *உயர் தொழில்நுட்பக் கல்லூரி (பகுதிநேர) ஆங்கில விரிவுரையாளர்* திரு.கோபாலகிருஸ்ணன் அவர்களுக்கு எனது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். எமது சமூகத்திற்கு இவரது செயல் முன்மாதிரியாக விளங்கட்டும்

(8210) - பணப்பைக்கு உரியவர்.



## ஓராண்டு கண்ணீர்ப் பூக்கள்



வீர மைந்தனாய் 11 - 06 - 1977

வீர மறவனாய் 12 - 09 - 2001

### கப்டன் துளசி/முகில்வண்ணன்

(வைரமுத்து சுதர்சன், களுதாவளை, மட்டக்களப்பு)
(யாழ். இந்துக் கல்லூரி 90ஆம் ஆண்டு உயிரியல் பிரிவு மாணவன்)

யாழ். இந்துவின் மைந்தனே
களமாடும் வீரர்களின்
உயிர்காக்க
களம் சென்ற - நீ
உயிரற்ற உடலாய் திரும்பியதும்
உறைந்து விட்டோம் - நீ
எமை பிரிந்து ஓராண்டான போதும்
எல்லாமே நேற்று நடந்தவை போல்
எம் உள்ளம் உணர்கின்றது!

பெருந்துயருடன்,
(8209) மருத்துவப் போராளிகள்.



## மரண அறிவித்தல்

### கதிரவேலு சபாபதி

*(ஓய்வுபெற்ற ஆசிரியர்)*

யாழ்ப்பாணம், சிறுப்பிட்டி கிழக்கை நிரந்தர வசிப்பிடமாகவும், 43/1, விசுவமடுவைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற ஆசிரியர் கதிரவேலு சபாபதி அவர்கள் 09.09.2002 திங்கட்கிழமை காலை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - கைலாயம் தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - தெய்வானை தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சோதிப்பிள்ளையின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற கார்த்திகேசுவின் அன்புச் சகோதரனும் செல்லம்மா, பொன்னம்மா, குகதாசன் (ஆசிரியர்), சோமாஸ்கந்தம் (அமெரிக்கா), பரமேஸ்வரன் (கோட்டக்கல்வி அதிகாரி, முல்லைத்தீவு), குகனேஸ்வரன் (கனடா), கலாசுதி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சதாசிவம் (விசுவமடு), காலஞ்சென்ற இராமச்சந்திரன் மற்றும் நிர்மலா, சாந்தி (அமெரிக்கா), பாரதி (ஆசிரியை), நந்தினி (கனடா), கீர்த்திசிங்கம் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சிதம்பரநாயகி, பொன்னம்பலம் ஆகியோரின் மைத்துனரும் கமலாதேவி (கனடா), திருச்செந்தூர்நாதன் (சுவிஸ்), கணேசலிங்கம் (சுவிஸ்), சூரியகலா (சிறுப்பிட்டி) ஆகியோரின் பெரியதந்தையும் சிவச்செல்வி (கொழும்பு), ஜெயச்செல்வி (கனடா), சிவநிசாந்தா (கொழும்பு), பிரசாந்தி (கொழும்பு), விஜயலதா, வினோதினி, வசந்தன், நிமல் (அமெரிக்கா), கவிதா (அமெரிக்கா), கோதிகா, நிட்சிகா, சேதுராகவன், கனடாவில் இருக்கும் சயந்தி, அஜன், நிரோசா, கீர்த்திகா, கீர்த்தன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.09.2002) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விசுவமடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*43/1, விசுவமடு.* (8206) சு. சதாசிவம் (மருமகன்)

# பாதுகாப்புக் குறித்து விவாதிக்கக் கோரி எதிர்க்கட்சிகள் சபையில் நேற்று அமளி

## கட்சித் தலைவர்கள் இணங்காததால் கோரிக்கை நிராகரிப்பு

கொழும்பு,செப்.12

புலிகள் இயக்கம் மீதான தடை நீக்கம் மற்றும் தேசிய பாதுகாப்புத் தொடர்பாக விவாதிக்கக் கோரி எதிர்க்கட்சியினர் முன்வைத்த ஒத்திவைப்புப் பிரேரணையை நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் ஸ்ரீசந்ரா ஹென்னதி நேற்று நாடாளுமன்றத்தில் நிராகரித்தார். விவாதத்துக்குச் சந்தர்ப்பம் வழங்கலாம்; ஆனால், அது இன்றில்லை என்று அவர் உறுதியாகக் கூறிவிட்டார்.

நேற்றுக்காலை 10 மணிக்கு நாடாளுமன்றம், குழுக்களின் பிரதித் தலைவர் ஸ்ரீசந்ரா ஹென்னதி தலைமையில் கூடியது. பொதுவான சம்பிரதாயங்களுக்கு அமைவாய் மூலக் கேள்விகள் கேட்கப்பட்டன.

அப்போது கண்டி மாவட்ட எம்.பியான மஹிந்தானந்த அலுத்கமகே, நாவலப்பிட்டிய பஸ் டிப்போ தொடர்பான கேள்வியொன்றை பாதுகாப்பு, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் விமானச் சேவைகள் அமைச்சர் திலக் மாரப்பனவிடம் கேட்டார். அதற்கு அமைச்சர் பதிலளித்தார். தொடர்ந்து மஹிந்தானந்த அலுத்கமகே இடைக்கேள்வியொன்றைக் கேட்டபோது, அவருக்கும் கூட்டுறவு அமைச்சர் அப்துல் காதருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது. அப்போது அவர்கள் இருவருக்கும் முன்னாலிருந்த ஒலிவாங்கிகள் செயற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

குழுக்களின் பிரதித் தலைவர், பல தடவைகள் அவர்களுடைய பேச்சில் குறுக்கிட்டு அமைதி பேணக் கோரியபோதும், அவர்களின் வாதம் முடிந்தபாடில்லை. இச்சந்தர்ப்பத்தில் பிரதமர் சபைக்குள் பிரவேசித்தார். அவர், அமைச்சர் காதரை அமைதியாக இருக்குமாறு சமிக்ஞை காட்டினார். அதைத் தொடர்ந்து சிறிது நேரம் ஸ்தம்பிதமடைந்த சபை நடவடிக்கைகள் மீண்டும் சூடு பிடித்தன.

அப்போது நாடாளுமன்ற நிலையியல் கட்டளையின் 17ஆவது சரத்துக்கிணங்க - தேசிய முக்கியத்துவமான விடயம் தொடர்பாக - சபை ஒத்திவைப்பு விவாதம் ஒன்றை நடத்த அனுமதி தரவேண்டும் என்று பொ.ஐ.முவின் தினேஸ் குணவர்த்தன எம்.பி. கோரிக்கை விடுத்தார். இதனால் மீண்டும் சபையில் கொந்தளிப்பு ஏற்பட்டது.

கடந்த வாரம் பருத்தித்துறையில் இடம்பெற்ற சம்பவம் காரணமாக நாட்டில் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. எனவே, நாட்டின் பாதுகாப்புத் தொடர்பாகவும், புலிகள் இயக்கம் மீதான தடை நீக்கம் தொடர்பாகவும் சபை ஒத்திவைப்பு விவாதம் தேவையென்று தினேஸ் குணவர்த்தன வேண்டுகோள் விடுத்தார். அதனை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எழுந்து நின்று ஆமோதித்தனர்.

### அமைச்சர் அஸ்வர்

உடனே எழுந்த அமைச்சர் அஸ்வர், எதிர்க்கட்சியினர் முன்மொழிந்த இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளமுடியாது என்று கூறினார். இது தொடர்பாக ஏற்கனவே கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுவிட்டது. இன்று பாதுகாப்புத் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதம் ஒன்றை நடத்துவதில்லை என்று ஏலவே தீர்மானித்துவிட்டோம்.

கட்சித் தலைவர்கள் கூட்டத்துக்கு எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ சமுகமளித்திருக்கவில்லை.

நாடாளுமன்றின் இன்றைய அமர்வு அனுதாபப் பிரேரணைகளைச் சமர்ப்பிப்பதற்காகவே ஒதுக்கப்பட்டுள்ளது. அதை மாற்றமுடியாது என்றார் அஸ்வர்.

### விமல் வீரவன்ஸ

அமைச்சர் அஸ்வரின் கருத்துக்களை ஜே.வி.பியின் விமல் வீரவன்ஸ எம்.பி. ஏற்கமறுத்தார். கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் ஆளும் கட்சியினர் எடுத்த முடிவை ஏற்றுக்கொள்ளாமல்தான் நாம் அங்கிருந்து வெளியேறினோம். இன்று நாட்டின் பாதுகாப்புக் கேள்விக்குறியாகியுள்ளது. புலிகளின் மூன்றாவது தலைவர் என்று கருதப்படும் பூவண்ணன் என்பவர் குருநாகலையில் வைத்து விபத்துக்குள்ளாகி கொழும்பு தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவரைப் பார்வையிடப் பாதுகாப்பு அமைச்சர் சென்றாரா? இல்லையா? என்பது எமக்குத் தெரியாது. நிலைமை இப்படி இருக்கும்போது, தேசிய பாதுகாப்புத் தொடர்பான விவாதம் ஒன்றை அனுமதிக்காமல் இருப்பது நியாயமற்றது - என்றார் விமல் வீரவன்ஸ.

### மஹிந்த சமரசிங்க

விமல் வீரவன்ஸ பேசி முடிக்கும்போது, எழுந்து நின்ற அமைச்சர் மஹிந்த சமரசிங்க தமது தரப்புக் கருத்துக்களை முன்வைத்தார்.

எதிர்க்கட்சியினருக்கு உண்மையிலேயே ஒரு விவாதம் தேவையா அல்லது அரசை இக்கட்டான நிலைக்குத் தள்ள முயற்சிக்கிறார்களா என்பது தெரியவில்லை.

வடக்கு - கிழக்கு நிலைவரம் தொடர்பாக விவாதம் நடத்துவதற்கு எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றின் கடந்த அமர்வில் அனுமதி கேட்டனர். அதற்கான ஒழுங்குப் பத்திரம் ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு கூறினோம்.

அது அவ்வாறு நடக்கவில்லை. எமது பேச்சாளர்களைக் கூடத் தயார்படுத்த எமக்கு நேர அவகாசம் கொடுக்காமல் ஒரு விவாதத்தை நடத்தமுடியாது என்று அவர் கூறினார்.

### தினேஷ் குணவர்த்தன

அமைச்சரின் கருத்துக்களை எதிர்க்கட்சி எம்.பியான தினேஷ் குணவர்த்தன ஏற்றுக்கொள்ளவில்லை. புலித் தலைவர் ஒருவர் கொழும்பு 'அப்லோ' வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவரைப் பார்வையிட நூறு புலி உறுப்பினர்கள் கொழும்புக்கு வந்துள்ளனர். இனி என்ன என்ன நடக்குமோ தெரியாது. இதனால்தான் புலித்தடையை நீக்கவேண்டாம் என்று நாம் அப்போதே சொன்னோம். ஆனால், அரசு அதைக் கேட்கவில்லை. பாதுகாப்பு அமைச்சர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வரவேண்டும் என்றோம். அதற்கு அரசு காலக்கெடு கேட்டது. அரசு மீதான நம்பிக்கைப் பிரேரணையும் அரசால் பிற்போடப்பட்டுவிட்டது. இவர்கள் திட்டமிட்டுத்தான் இவற்றைச் செய்கின்றனர்.

நாட்டில் பாதுகாப்புத் தொடர்பாக பதிலளிக்க பிரதமர் கடமைப்பட்டிருக்கிறார். அவர் இப்போது கூட நாடாளுமன்றத்தில் இருக்கிறார் - என்று தினேஷ் குணவர்த்தன கூறினார்.

பருத்தித்துறைச் சம்பவம், புலித் தடை நீக்கம், நாட்டின் பாதுகாப்பு என்பவை தொடர்பாக சபை ஒத்திவைப்பு விவாதம் தேவையென்று எதிர்க்கட்சி முரண்டு பிடித்தது; கூக்குரலிட்டது; கோஷமெழுப்பியது. இதனால் சபை சில நிமிடங்களுக்கு அமைதியின்றிக் காணப்பட்டது. நிலைமையைக் கட்டுப்படுத்த குழுக்களின் பிரதித் தலைவர் தொடர்ந்தும் முயற்சித்தார். இறுதியில் எதிர்க்கட்சியின் கோரிக்கையை குழுக்களின் பிரதித் தலைவர் நிராகரித்தார். அது பற்றி அவர் அறிவிக்கையில் -

கடந்த 5ஆம் திகதி கட்சித் தலைவர்களின் கூட்டம் இடம்பெற்றது. அதில் வடக்கு - கிழக்கின் பாதுகாப்புத் தொடர்பாக விவாதம் நடத்த அனுமதி கேட்கப்பட்டது. ஆனால், சரியான நடைமுறைகள் பின்பற்றப்படாததால் அதை இன்று விவாதத்திற்கு எடுக்கமுடியாது என்ற தீர்மானித்தோம். அதற்கிணங்க இன்று நாடாளுமன்றத்தில் சபை ஒத்திவைப்புப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவரமுடியாது. அதனை வேறொரு தினத்தில் மேற்கொள்ளலாம் - என்றார். (ம-12)


லக்கி என்ரபிறைஸ்

இல. 160, நவீன சந்தை (உட்புறம்),
(முதலாம் புளக்)

எம்மிடம்

காஸ் குக்கர், றைஸ் குக்கர், பிளண்டர் வகைகள், எக் பீற்றர், றேடியோ வகைகள், சுடுநீர்ப் போத்தல் (எல்லா அளவுகளிலும்), சுவர் மணிக்கூடு, கைக்கடிகாரம், T.V. கேம், எலக்றிக் கேத்தல், அயன் பொக்ஸ், கல்குலேட்டர், ஓடியோ கசெட், வீடியோ கசெட், போட்டோ அல்பம், குடைகள், ஹொட் பிளேட், எமசன் கீற்றர், கிளாஸ் வகைகள்

இன்னும் பல பொருள்கள் - அனைத்துமே மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.

☞ பிளண்டரின் உதிரிப்பாகங்களும் எம்மிடம் கிடைக்கும்.

LUKKY ENTERPRISE
No. 160, New Market Inside,
Jaffna. T.P.: 2858
(8218)


### 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 07 - 12 - 81

மறைவு 30 - 08 - 99

**அமரர் நடராஜா சிவாகரன்**

திதி: 12.09.2002

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய் வாழ்ந்து
ஆசை முகத்துடன் எமையெல்லாம்
அரவணைத்த செல்வமே!
ஆண்டுகள் மூன்று தான் ஓடி மறைந்திடினும் ஆறிடுமோ
உன் பிரிவுத்துயர்?

*அன்னாரின் பிரிவால் துயருறும்:*

அப்பா, அம்மா, சகோதர
சகோதரிகள், மாமாமார், மாமிமார்
மற்றும் உறவினர்கள்,
குடும்பத்தவர்கள்.

*பூதர்வளவு,*
*அச்செழு.*

(8216)

### மரண அறிவித்தல்

**திருமதி ரகுநாதன் ஜெயாநாயகி**

திருநெல்வேலி, பாற்பண்ணை வீதியைச் சேர்ந்த திருமதி ரகுநாதன் ஜெயாநாயகி அவர்கள் நேற்று (11.09.2002) புதன்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் ரகுநாதனின் அன்பு மனைவியும் தம்பிராசா - பரமேஸ்வரி தம்பதியினரின் அன்புப் புதல்வியும் ரயீவன் (கனடா), கிருசியன் (பரி.யோவான் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
ரகுநாதன் (கணவர்)
(லிங்கம் கூல் பார்)

*பாற்பண்ணை வீதி,*
*திருநெல்வேலி.*

(C/23779)


பொருளியற் கல்லூரி
கே.கே.எஸ். வீதி, இணுவில்.
A/L DAY CLASS
புதிய பிரிவு
திங்கள், புதன், வியாழன், வெள்ளி
Com. - 8.00 - 9.30
திரு.முரளி B.B.A (F.m. Spl.)
Acc. - 9.30 - 11.00
திரு.முகுந்தன் B.B.A. (Hons)
Eco. - 11.00 - 12.30
திரு.வரதராஜன் B.A. (Hons)
கலைப் பிரிவுகள்
வழமையான நேரசூசிப்படி
நடைபெறுகின்றன.
(8230)

பொருளியற் கல்லூரி
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
A/L DAY CLASS
புதிய பிரிவு
திங்கள், புதன், வியாழன், வெள்ளி
Eco. - 8.00 - 9.30
திரு.வரதராஜன் B.A. (Hons)
Com. - 9.30 - 11.00
திரு.முரளி B.B.A (F.m. Spl.)
Acc. - 11.00 - 12.30
திரு.முகுந்தன் B.B.A. (Hons)
கலைப் பிரிவுகள்
வழமையான நேரசூசிப்படி
நடைபெறுகின்றன.
(8219)

ராஜா யாழ்ப்பாணம்.
10.30, 2.30 மட்டும்
ரஜனி மனீஷா கவுண்டமணி நடித்த
பாபா
இரவு 7.00, 9.00 மட்டும்
FINAL FIGHT
(KARATE FILM)
(C-23396)

நாகம்ஸ் சுன்னாகம்
மூன்றாவது வெற்றி வாரத்தை நோக்கி
சூர்யா, லைலா, ஸ்நேகா நடித்த
உன்னை நினைத்து (கலர்)
காட்சிகள்: 11.00, 2.00 (பு.நே.)
(8204)

நிறைஞ்சனாஸ் சங்கானை
பிரபுதேவா, ராஜ்சுந்தரம், ஜோதிகா நடித்த
ஒன்ரூ திறி
1 2 3 (கலர்)
காட்சிகள்: 11.00, 2.30, 6.00 (புதியநேரம்)
(C-23604)

கருத்தரங்கு
இணையம் ஓர் அறிமுகம்
(Introduction to Internet)
கனடாவில் இருந்து வருகை தந்திருக்கும்
திரு.S.Rajkumar கணனிப் பொறியியலாளர்
அவர்களால் வழங்கப்படவுள்ளது.

- இணையப் பிரயோகம் Internet Applications
- மூவழி இயக்கம் 3-TIER Application
- இணையப் பாதுகாப்பு Internet Security (Firewall, DMZ)
- அறிமுகம் Protocols TCP/IP

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கைலாசபதி கலையரங்கம்
வெள்ளிக்கிழமை
பி.ப. 2.45 மணி.
(8211)

தகவல் தொழில்நுட்பப் பிரிவு.
மருத்துவ மாணவர் ஒன்றியம்,
யாழ். பல்கலைக்கழகம்.

## புதிய பரிவர்த்தனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடியவில்லை என்றும் தொலைபேசிச்சேவை சீராகவில்லை என்றும் அவர்கள் குறைப்பட்டனர். இவ்விரு சேவைகளும் தற்சமயம் சீராகியுள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதிமுதல் ரூபவாஹினியின் 'ஐ' அலை வரிசையில் முழுமையாகத் தமிழ் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படவிருக்கின்றன.

அமைச்சர் மகேஸ்வரன் சில கோரிக்கைகளை இங்கு முன்வைத்தார்.

அவற்றுக்கு தனித்தனியாக பதிலளிக்க விரும்புகின்றேன்.

★ பத்திரிகையாளர்கள் முன்னுரிமைக்கட்டணம் இன்றி 10 சதவீத கழிவுடன் தொலைபேசி இணைப்பைப் பெறலாம்.

★ மதத்தலங்கள், மதகுருமார் முன்னுரிமைக்கட்டணம் இன்றி 15 சதவீத கழிவுடன் இணைப்பைப் பெறலாம்.

★ மோட்டரோலா பாவனையாளர்களின் பிரச்சினைகள் தொடர்பாக கொழும்பு நாம் திரும்பியதும் ஆராய்ந்து நடவடிக்கை எடுப்போம்.

★ யாழ். தபாலகத்தின் புதிய கட்டடம் இவ்வருட இறுதிக்குள் மக்கள் பாவனைக்கு திறக்கப்படும் - என்று அவர் தெரிவித்தார்.

இந்து, பௌத்த, கிறிஸ்தவ, முஸ்லிம் மதத்தலைவர்களின் ஆசியுடன வைபவம் ஆரம்பமானது.

புதிய பரிவர்த்தனை நிலையம் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து குடாநாட்டுக்கான புதிய தொலைபேசி இலக்கங்கள் நேற்றுக் காலை முதல் பாவனைக்கு வந்தன. 10 எண்களைக் கொண்ட இந்த புதிய இலக்கங்கள் இலங்கையிலேயே யாழ்.குடாநாட்டில்தான் முதன் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. (ம-3-8)

## 19ஆவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னணியைச் சேர்ந்த எம்.பி.க்கள் முன் வைத்த யோசனைகள் கூட இந்தத் திருத்தத்தில் இடம்பெற்றுள்ளன.

அரசமைப்புத் திருத்தம் பற்றி வர்த்தமானி மூலம் அறிவிக்கப்படும். திருத்தங்கள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டால் கூட அவற்றின் மீதான ஆலோசனைகளைத் தெரிவிக்க முடியும் என்றும் அவர் கூறினார்.(ம-12)

## வாந்திபேதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லேயே சடலம் அடக்கம் செய்யப்பட்டது. இவருடன் இந்நோய்க்கு இது வரை மூவர் உயிரிழந்துள்ளனர்.

பரவலாக வியாபித்து வரும் இந்நோயின் தாக்கத்தால் இருபாலை, விதானையார் ஒழுங்கையைச் சேர்ந்த உதயகுணபாலன் பாக்கியம் (வயது 35) பாஷையூரைச் சேர்ந்த எஸ். துஷாந் (வயது 16) காரைநகரைச் சேர்ந்த எஸ்.பாலசிங்கம் (வயது34) ஆகியோர் யாழ்.போதனா வைத்திய சாலையில் நேற்றுமுன்தினம் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

வரப்போகின்ற காலம் மழைகாலம் ஆகையால் இந்நோய் தீவிரமாகப் பரவும் சாத்தியக்கூறுகள் இருப்பதாகக் கருதப்படுகின்றது. இதனைத் தடுக்க சுகாதாரப் பழக்கவழக்கங்களைக் கடைப்பிடித்து ஒத்துழைக்குமாறு யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரத்தால் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இறந்தவர்களுடன் சேர்த்து இது வரை மொத்தம் 18 பேர் இந்நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, யாழ். குடாநாட்டில் பரவிவரும் வாந்திபேதியைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும் பொருட்டு யாழ்.மாவட்ட சுகாதார சேவைகள் பிரிவு வைத்தியசாலைக்கு வாந்திபேதி நோய்க்கான மருந்துகள் இன்னும் இரண்டொரு தினங்களில் அனுப்பி வைக்கப்படவுள்ளன.

இவற்றிக்குத் தேவையான மருந்து வகைகள் யாவும்,யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பிரிவு மத்திய மருந்தகத்திற்கு நேற்றுமுனதினம் கொழும்பில் இருந்து லொறிமூலம் அனுப்பி வைக்கபட்டுள்ளன.

மத்திய மருந்தகம் அவற்றை சகல வைத்தியசாலைகளுக்கும் விநியோகிக்கும் நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளது. (ம-15)

## அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரப்படுவர். ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போது அரசதரப்பில் அமைச்சர் ஜி.எல்.பீரிஸும், புலிகள் தரப்பில் அன்ரன் பாலசிங்கமும் பேச்சுக்கள் தொடர்பாகத் தத்தமது தரப்புக் கருத்துக்களை வெளியிடுவர்.

நோர்வே அரசுப்பிரதிநிதி ஒருவரும் தாய்லாந்து அரசுப்பிரதிநிதி ஒருவரும் பேச்சுக்களில் தத்தமது அரசுகளின் பங்களிப்புப் பற்றி விளக்குவர்.

இதற்குப் பின்னர்தான் பிற்பகலில் கடற்படைத்தளத்தில் அரச குழுவுக்கும் புலிகள் குழுவுக்கும் இடையே முதற்சுற்றுப் பேச்சு நடக்கும் பேச்சு நடக்கும் இடத்துக்குள் செல்ல ஊடகவியலாளர்கள் உட்பட வெளியார் எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

முதற்சுற்றுப் பேச்சுக்களின் இறுதி நாளான 18ஆம் திகதி பேச்சுக்கள் முடிந்தபின்னர் அரசகுழுவினரும் புலிகள் குழுவினரும் ஊடகவியலாளர்களை இரண்டாவது முறையாக சந்திப்பர்.

இந்தச் சந்திப்பும் முன்னயதைப் போலவே அதே ஹோட்டலில் நடைபெறும். இந்தச் சந்திப்பின்போது முதற்சுற்றுப் பேச்சுப் பற்றி அறிக்கை வெளியிடப்படும்.

பேச்சு நடத்தும் அரசகுழுவில் இடம்பெறுவோர் அமைச்சர்கள் ஜி. எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட, ரவூப் ஹக்கீம், சமாதானச் செயலகத் தலைவர் பேர்னாட் குணத்திலக்க ஆகியோர் ஆவார்.

புலிகள் குழுவில் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம், சட்ட நிபுணர் விசுவநாதன் உருத்திரகுமாரன், அபிவிருத்தித்துறை நிபுணர் டாக்டர் ஜே.மகேஸ்வரன், திருமதி அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் இடம் பெறுகின்றனர். (ம-12)

## 14புலிகளையே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள 23புலிகளை அல்ல, 14 புலிகளையே கைதிகள் பரிமாற்றத்தின் கீழ் விடுவிக்கமுடியும் என்று அரசுத் தரப்பு புலிகளுக்குத் தெரியப்படுத்தியிருப்பதாகக் கூறப்படுகிறது.

ஏனைய 9பேரையும் விடுவிப்பதில் சட்ட நடைமுறைப் பாதிப்புக்கள் இருப்பதாக சட்டமா அதிபர் திணைக்களம் பாதுகாப்பு அமைச்சுக்குச் சுட்டிக்காட்டியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இதனையடுத்து 14 பேரை மட்டுமே விடுவிக்கமுடியும் என்ற தகவலை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகள் மூலம் பாதுகாப்பு அமைச்சு, புலிகளுக்குத் தெரியப்படுத்தியது.

"புலிகளின் சாதகமான பதிலை எதிர்பார்க்கிறோம்" - என்றார் பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் ஒருவர். (ம)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காப்பு அமைச்சின் அனுமதி பெற்று அவர் வன்னியிலிருந்து வந்திருந்தார் எனக் கூறப்பட்டது.

புவண்ணன் பயணம் செய்த மோட்டார் வாகனம் மதகுரு ஒருவர் செலுத்தி வந்த மோட்டார் வாகனத்துடன் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது.

வாகனத்தில் இருந்த அவரது மெய்க்காப்பாளரான புலி உறுப்பினரும் கார்ச் சாரதியும் படுகாயமடைந்துள்ளனர். இவர்கள் இருவரும் வேறு ஒரு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். (ம)


03 APRIL அதிரடி வெளியீடு

LOGIC

விஞ்ஞானிகளும் கொள்கைகளும்



- 2002 Apr. வினா மாற்றத்திற்கமைவாக.
- கடந்தகால மாற்றத்திற்குட்பட்ட வினா-விடைகளுடன்
- முற்றிலும் எதிர்பார்க்கை வினாக்கள் உள்ளடங்கலாக.

2003 Apr. பரீட்சைக்கு ஏற்றவிதத்தில்

By. P.கமல் (J/Hindu Ladies College)

சொற்பப் பிரதிகளே உள்ளன.

❖ பூபாலசிங்கம், ஸ்ரீலங்கா, துர்க்கா (சுன்னாகம்), ஸ்ரீ சுப்பிரமணிய, பிரியங்கா (பருத்தி.), நாவலர் (புலோலி), அறிவமுது (வன்னி), கவிதா (வவுனியா).

(8221)



சாட்டி சிந்தாத்திரை மாதா

யாத்திரைத்தல திருவிழா



21.09.2002
சனிக்கிழமை

இன்று (12.09.2002) வியாழன் - கொடியேற்றம்
தினமும் நவநாள்கள் மாலை 5.00 மணிக்கு
செபமாலையுடன் ஆரம்பமாகும்.

20.09.2002 வெள்ளி நற்கருணை விழா - இறை தியான வழிபாடு

21.09.2002 சனி திருவிழா
முதற் திருப்பலி காலை 6.00 மணிக்கும்
திருவிழாத் திருப்பலி காலை 9.00 மணிக்கும்
ஆயர் தலைமையில் நிறைவேற்றப்படும்.

அன்னையின் பரிந்துரையால் இறையருள் பெற
அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

அருட்திரு. எரிக்.றோஷான். - பரிபாலகர்.

(8212)



முக்கிய அறிவித்தல்

A/L 2003 கணித. விஞ்ஞான

மாணவர்களிற்கோர் அரிய சந்தர்ப்பம்

★ முக்கிய அலகுகள் யாவும் ஒரே காலப்பகுதியில்

"PHYSICAL CHEMISTRY"

பிரிவு I Tue.-3-4 & Fri-5-6
பிரிவு II Mon-5-6 & Thu.-4-5
ஆரம்பம்-16-09

"Inorganic"

பிரிவு I Mon. Fri 6-7 p.m.
பிரிவு II Wed 6.30-7.30 & Fri. 4 - 5
ஆரம்பம்-11-09

"ORGANIC"

Mon., Fri. 7-8 p.m.

"Paper class"

பிரிவு I Tue.Thu. 5-6 p.m.
பிரிவு II Tue.Thu. 7.30-8.30 a.m.
பிரிவு III Sat. & Sun. 8-9 a.m.
பிரிவு IV Sat. & Sun. 10-11 a.m.

"வளங்கள்"

Thurs 3-4 p.m.

By. அன்பழகன் (அன்பு)

★ யாவும் பழைய நேரப்படி
★ எல்லா அலகுகளிற்குமாக ஒரேயொரு கட்டணம்.
★ எல்லா மாணவர்களும் Paper Class இல் கலந்துகொள்ளவேண்டும்.
★ இவ்வாரம் மட்டுமே அனுமதி. எக்காரணம் கொண்டும் இடைக்காலப் பகுதியில் மாணவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

CHEMISTRY CENTRE
பலாலி வீதி, கந்தர்மடம்.



புலமைப் பரிசில் திட்டம்
2001/2002

மேற்படி புலமைப்பரிசுத் திட்டத்தின்கழ் தெரிவுசெய்யப்பட்டு, இதுவரை பதிவினை மேற்கொள்ளாத நெல்லியடி, சங்கானைக் கிளைகளில் கற்கவிரும்பும் சகல மாணவர்களும், உங்களுக்கான விசேட கற்கைநெறிகள் ஆரம்பமாகவிருப்பதால் உடனடியாக உங்களது கிளை நிறுவனங்களுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

இயக்குநர்,
IIS - யாழ்ப்பாணம்.
(C/23755)



BRIGHTMAN

பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்நகர்.

சரளமாக உரையாட

சிங்களம்

புதிய பிரிவுகள் ஆரம்பம்

பிரிவு 1 13.09.2002 Fri. 3.30
Mon., Fri. - 3.30 (O.T.)
பிரிவு 2 14.09.2002 Sat. 3.00
Sat., Sun. - 3.00 (O.T.)

By. லீலாக்கிருஸ்ணன்
(C/23756)



CHEMISTRY CENTRE

பலாலி வீதி, கந்தர்மடம்.

A/L 2004

"Mechanics"
Wed., Thu. 5-30 - 6.30
"Waves & Vibration"
Wed., Thu. 4-30 - 5.30
"Heat"
Sat., Sun. 3 - 4
BY: சிவலிங்கம்
"Inorganic"
Wed 7 -8, Fri. 4 - 5
BY: அன்பழகன்



யாழ்.பல்கலைக்கழக முதலாம் வருட விஞ்ஞானபீட மாணவர்களுக்கான

அவசர கலந்துரையாடல்

காலம் : நாளை (13-09-2002) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி
இடம் : விஞ்ஞானபீட மாணவர் பொது அறை
விடயம் : கல்விச் சுற்றுலா

சுற்றுலா செல்லவிருக்கும் செல்லாத
அனைத்து மாணவர்களும் தவறாது கலந்துகொள்ளவும்.

- சுற்றுலா ஒழுங்கமைப்பாளர்கள்.

(8202)



'உதயன் - சஞ்சீவி'

வன்னிப் பிரதேச செய்தியாளர்களுக்கான

பதவிகள்

வன்னியில் பின்வரும் பிரதேசங்களில் 'உதயன் - சஞ்சீவி' பத்திரிகைகளின் செய்தியாளர்களாகப் பணிபுரிவதற்குப் பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

★ கிளிநொச்சி ★ மாங்குளம்
★ புதுக்குடியிருப்பு ★ மல்லாவி

விண்ணப்பதாரிகள் குறித்த பிரதேசத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.

ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் (தமிழ் மொழி உட்பட) சித்தி அடிப்படைத் தகைமையாகவும் ஜி.சீ.ஈ. உயர்தரததில் சித்தி மற்றும் ஆங்கிலமொழி அறிவு என்பன மேலதிக தகைமைகளாகவும் கணிக்கப்படும். அத்துடன் தமிழில் நன்கு எழுதும் ஆற்றலும் பிரதேச புவியியல் பற்றிய அறிவும் கவனத்திற்கொள்ளப்படும்.

விண்ணப்பங்களைச் சொந்தக் கையெழுத்தில் தயாரித்து

'பிரதம ஆசிரியர்,
உதயன் - சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்'

என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும். விண்ணப்பங்களை நேரிலும் கையளிக்கலாம். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் *'வன்னிப் பிரதேச செய்தியாளர் பதவிக்கான விண்ணப்பம்'* எனக் குறிப்பிடவும்.

விண்ணப்ப முடிவு தினம்: 26.09.2002

(C/23776)



உ

அராலி கரைப்பிட்டி

கணபதீஸ்வரன் திருக்கோயில்

மணவாளக்கோலவிழா

நாளை (13.09.2002) வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிமுதல் சங்காபிஷேகம் 1108. மாலை 4.00 மணிமுதல் தண்டிகை உற்சவம்.

| நாதஸ்வரம் | தவில் |
|---|---|
| நாதகலாமணி R.சிவகுமார் | இந்திய தவில் வித்துவான் |
| நாதஸ்வர வித்துவான் N.சிவதாசன் | மலைக்கோட்டை A.அசோக்குமார் |
| இந்திய நாதஸ்வர வித்துவான் | இந்திய தவில் வித்துவான் |
| சின்னமனூர் N.K.கார்த்திகேயன் | ஸ்ரீரங்கம் V.G.முருகன் |
| இந்திய நாதஸ்வர வித்துவான் | தவில்மேதை N.R.சின்னராசா அவர்களின் |
| இரும்பாவனம் E.V.இளையராசா | அருமை மகன் N.R.S.இரவீந்திரன் |

காலை 9 மணிக்கும் மாலை 4 மணிக்கும் நாதாஞ்சலி நடைபெறும்.
அடியார்கள் தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெறுக.

- தேவஸ்தானத்தினர்.

(8002) ஐங்கரன் திருவருளை வேண்டி நிற்கின்றோம்.

பாலன் மில்ஸ்,
மாவடிச் சந்தி, வட்டுக்கோட்டை.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.09.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.